4) சுத்த வெளியாக இருக்கும் மெய்பொருளையே நினைந்து அதுவாகி அமைதிபெறும் உளப்பயிற்சி “ இறை நிலையாதல் ” இது தான் “ சமாதி ” (சமம் + ஆதி) என்று வழங்கப்படுகிறது.

தவத்திரு வேதாத்திரி மகரிஷி அவர்களின் எளிய முறை குண்டலினி யோகம் எனும் உயிர்விளக்க அகத்தவத்தில் இந்நான்கு வகைப்பயிற்சிகளும் ஒன்றிணைந்து பயனாகின்றன. தவம் பயின்று வரும்போது பொருள்களில் இருந்தும் புலன்களில் இருந்தும் மனம் விடுபடுகிறது. அகத்தவத்தால் அறிவுகூர்மையும், அமைதியும் உறுதியும் தெளிவும், சிந்திக்கும் திறன் கிடைக்கிறது. இவையெல்லாம் பொதுவாக யோகப்பயிற்சியினால் கிடைக்கும் பயன்கள்.

இப்போது இந்த யோகப்பயிற்சியை மாணவர் பருவத்தில் ஏன் பயில வேண்டும். இந்த பருவத்திலியே ஏன் பயிலவேண்டும் என்றால், மாணவர் பருவம் மிக்க மதிப்புடையது நம் முன்னோர்கள் வயதுக்கும், அறிவுக்கும்கடமைக்கும் இணைப்புக் கொடுத்து நம் வாழ்வை நான்கு வகையில் பிரித்தார்கள். அவை (1) இளமை நோன்பு (2) இல்லறம் (3) அகத்தவம் (4) தொண்டு என்பனவாகும் வாழ்வில் பொறுப்பேற்ற ஒவ்வொருவருக்கும் இந்நான்கு பண்பாடுகளும் இணைந்தே செயலாக வேண்டும்.

“ இளமை நோன்பு ” என்ற - ஒன்றைப் பயிலும் காலம் தான் மாணவர் பருவம். மனிதன் சிறப்புற, வாழ்வில் வளம்பெற மாணவர் பருவமே ஏற்றதோர் பயிற்சிக் காலம். நலவாழ்வின் இன்றியமையாத தேவையான (1) எழுத்தறிவு (2) தொழிலறிவு (3) இயற்கை தத்துவ அறிவு (4) ஒழுக்க பழக்கங்கள் இவை இணைந்த கல்வி யேமுழுக் கல்வியாகும் இவற்றை பயில பொருத்தமான காலம் மாணவர் பருவமே எழுத்தறிவு, தொழிலறிவு இரண்டும் விரிவாக கல்வி முறையில

Scanned by TapScanner

பாடத்திட்டமாகக் கற்றுத்தரப்படுகிறது. இயற்கையோடு ஒத்து வாழ வழி காட்டும் இயற்கை தத்துவ அறிவும், வாழ்வுக்கேற்ற ஒழுக்க பழக்கங்களும் அகத்தவத்தாலன்றி வேறு எங்கும் கிட்டாது. மாணவர்களுக்குப் படிப்பில் மனம் நிலைக்க, அவற்றை நினைவிலே வைத்துக் கொள்ள, போதிய மனவலுவு, கூர்மை, நுண்மை இவை அனைத்தும் தியானம்" என்ற உளப்பயிற்சியினால் தான் கிடைக்கிறது. மேலும் மனிதனிடம் அடங்கியுள்ள ஆற்றல்களை முறைப்படுத்த வேண்டுமாயின் இளமை நோன்புக் காலமாகிய மாணவப் பருவம் தான் சிறந்தது. அறிவு, ஆற்றல சிதறாமல், செயல்கள் நெறிபிறழாமல் சிறப்புற மாணவர் பருவத்திலேயே பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

இப்பருவத்தை நழுவவிட்டால் தேவையற்ற துன்பமும், சிக்கலும் தாத்தக்க எண்ணங்களும் செயல்களும் தொற்றிக் கொள்ளும் பிற்காலத்தில் இவற்றை மாற்ற மிகுதியான முயற்சி எடுக்கவேண்டும். ஏனெனில் பழக்கமாகி விட்டமனத்தின் எண்ணங்களையும், செயல்களையும் மாற்றுவது கடினம். எனவே மாணவப் பருவத்தில் நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் ஒவ்வொரு மாணவனும் சிறந்த ஆற்றலுள்ள நல்லதோர் நிதியாக திகழவேண்டுமென்றால் மாணவப் பருவத்திலே மனவளக் கல்வி இடம் பெறவேண்டும்!

இந்தப் பருவத்தை நழுவவிட்டு புலன்வழியே கவர்ச்சிகளால் தேவையற்ற எண்ணங்களும், செயல்களும் இளம் வயதில் பதிந்து விட்டால் சமுதாய நலனையே அழிக்க கூடிய நச்சு ஆகிவிடுகிறான் மாணவ பருவத்தில் அகத்தவம் பயின்று தூய்மை பெறும்போது கல்வி நிலையங்களில் எந்தவகை குழப்பங்களும் ஏற்பாடது. இதனால் அமைதி நிலவும். சமுதாயத்தில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். அரசியல் சிறப்புறும்; பொருளாதாரமும் வளம்பெறும்.

எழுத்தறிவு, தொழிலறிவு இரண்டை மட்டும் வளர்த்துக் கொண்டு இயற்கை தத்துவம், ஒழுக்க பழக்கங்கள் இவற்றை அலட்சியம் செய்தால் எதிர்கால மாணவ சமுதாயத்தின் இன்பம் நச்சாகி விடும். வாழக்கை வரண்டு போகும். மாணவர் பருவத்தில் அகத்தவம் பாடதிட்டமாக புகுத்துவதற்கு மாணவர் கள் மட்டும் முயன்றால் போதாது. கல்வி நிலைய ஆசிரியர்கள் ஊக்கமளித்து மாணவ சமுதாய நலனை முன்னேற்ற வேண்டும்.

**
**

Scanned by TapScanner

கொககுப் பச்சை குத்தி நான்
சொர்ணம் போல தேர் எழுதி, நான்
தோகை மயில் இழந்தேன் நான்
குணம் உள்ள தாயை இழந்தேன்.

(தந்தை இறந்தால் பாடுவது)

பழனிமலையிலே என்னையா செல்வதியே
பழனிமலையிலே பட்டுத் துவைக்கையிலே
உங்களைப பழனிமலை வேடர்கள்
பந்திக்கு அழைத்தார் களோ?

வெளளிமலையிலே நீங்க வேட்டி துவைக்கயிலே
வெளளிமலை வேடர்கள் உங்களை
விருந்துககு அழைத்தார் களோ?

நீங்கள் குளித்து வரும்போது
உங்க கூடவரும் ஸ்ரீதேவி
நீங்கள் மினுக்கி வரும்போது
உங்க முன்னாடி வரும்ஸ்ரீதேவி

பாடைகட்டி என்னையா தர்மரே நீங்க
போகின்ற பட்டணத்தை அலங்கரிப்போம்.
நாங்கள் பாடைக்குக் கீழே
பாம்பாகப் பிரண்டு அழுவோமே!

நாங்கள் தேர்கட்டி நீங்கள் போகின்ற
தேச மெல்லாம் அலங்கரிப்போம்
தேருக்கு கீழே நாங்கள்
தேளாகப் பிரண்டு அழுவோமே!

கருப்புரயில் ஏறி என்னையா அதிகாரி
நீங்க கைலாசம் போறீகளோ?
வருணம் ரயில் ஏறி என்னையா அதிகாரி
நீங்க வைகுண்டம் போறேகளோ?

கோலவருணம் செம்புகொண்டு குளத்திலே நீர்மோந்து
கோடிஜனததோட என் பிறவீ அதிகாரி ஐயா
உங்களுககுத் தணணி கொண்டு வந்து
ஊற்றச சம்மதமா?

நாலுகுதலை வாசல் நாற்பத்தெட்டு ஆசாரம்
மேலே இருந்து ராஜாஙகம் ஆளயிலே
தலை அடிக்குதுன்னு என்னையா தர்மரே
நீஙக சாய்ந்து படுத்தீர்களா?

Scanned by TapScanner

சப்பரமுஞ்சிக்
தந்திமதி
கொல்ல
புத்திமதி
பத்திஇலைப்
கைமருந்தாம்
உங்களை
எட்டியிலைப்
கை மருந்து
உங்களை
கடுகுக்குடினீ
கைகழுவ
கைலாசம்
மிளகுக்குடினீ
முகம்கழுவ
சுடுகாடு

கட்டிலிலே
சொல்லி
யமனுக்கு
சொல்லி
பச்சிலையாம்
நான் பார்த்து
பகவானா
பச்சிலையாம்
நான் எடுத்து
ஈசுவரன்
போட்டேன்
வெண்னீர்
அனுப்பி
போட்டேன்
வெண்னீர்வச்சேன்
அனுப்பி

தள்ளவந்த யமனுக்கு நான்
வந்தேன்
நான்
வந்தேன்
பகவானோட
அரைக்கு முந்தி
அழைச்சானா?
ஈசுவரனா
அரைக்கு முந்தி
அழைத்தானா?
உங்களுக்குக்
வச்சேன் உங்களக்
வைச்சேன்
உங்களுக்கு
உங்களைச
வச்சேன்

(கணவனை இழந்தவர் பாடுவது சத்திரப்பட்டி தெற்குத் தெருவில் வசிக்கும் திருமதி உமையாள் பார்வதி இசையோடு பாடி ஆய்வாளர் திரு முத்துச்சாமி ஒலிப்பதிவு செய்தது)

என்னோட
என்னோட
என்னோட
என்னோட
சின்ன
சேலை
சீதை
சீமானைத்
பச்சை
பட்டுச
பத்தினி
பாக்கியத்தைத்
தங்கத்தலை
தாசில்தாரைக்
நான் பெற்ற
பொன்னுத்தலை
போலீசைக்
என்னோட
நெட்டுநெட்டா
நீல

ஆடை
ஆபரணங்கள்
சேலை
சொப்புத்தாலி
இரும்புப்
வைக்கும்
அறுத்ததென்ன?
தோற்றதென்ன?
இரும்புப்
சேலைவைக்கும்
அறுத்ததென்ன
தோற்றதென்ன?
வாசலிலே
கையெடுத்துக்
செல்வமகன்
வாசலிலே
கையெடுத்துக்
பிள்ளையெல்லாம்
வீடுகளாம்
வருணக்

கொடியிலே
பொட்டியிலே
கொடியிலே
பொட்டியிலே
பெட்டிநான்
டிரங்குப்பெட்டி நான

பெட்டி நான்
பெட்டி நான்
நான்

தாசில்தார் வந்திறங்கும்
கும்பிட
தம்பிமார் சிசுவிலே
போலீசு வந்திறங்கும்
கும்பிட
சிசுவிலே
நமக்கு
கோட்டைகளாம்

Scanned by TapScanner

| | | |
|---|---|---|
| நீலவருணக் | கோட்டையிலே | நீங்க இல்லாமே எனக்கு |
| நிகக | பயம் | தோனுதிலே |
| திட்டுத்திட்டா | வீடுகளாம் | நமக்குத் |
| தங்க | வருணக் | கோட்டைகளாம் |
| தங்க | வருணக | கோட்டையிலே நீங்க இல்லாம எனக்கு |
| தங்க | பயம் | தோனுதிலே |
| ஆடிவரும் | பாப்பானுக்கே | நீங்க பெற்ற செல்வங்களுக்கு |
| ஓர் | அன்னதானம் | செய்யலியே |
| நீங்க | பாடிவரும் | பாப்பானுக்கே நீங்க பெற்ற செல்வங்களுக்கு |
| ராமேஸ்வரம் | போயி | பசுதானம் செய்யலியே |
| கறுப்புத் | தலையணை | உங்களுக்குக் கஸ்தூரி வாசனையை |
| இநதக | கஸ்தூரி | வாசனையை நான் காணபதெக் காலமோ |
| சிவப்புத்தலையணை | உங்களுக்குச் | செந்தூர் வாசனையோ |
| உங்கள | நான் தேடுவது | எந்தக காலமோ |
| சந்தன | பட்டுடுத்தி | நான் சபையிலேநிக்கையிலே இந்தச் |
| சந்தன | வாசத்திலே | என் சாமி என் துரையே |
| நம்ம | சபையை | மறந்தேளா? |
| தங்கச்சைக்கிள் | ஏறி நீங்க | சீமைக்குப் போனாலும் |
| சபையாரெல்லாம் | இங்கிருக்க | நீங்க |
| ஜமீன்தார் | மாளலாமோ? | |
| வெளளிச்சைக்கிள் | ஏறி நீங்க வீதி | ஆளப்போகையிலே |
| வீதியார் | இங்கிருக்க | நீங்க |
| வீமனார் | மாளலாமோ? | |
| தாலினாதாலி | தங்கப்பூ | தாலி |
| தங்கப்பூத் | தாலியைக் | கழற்றி வைக்க |
| எனக்கு | நாளாச்சு | |
| மிஞ்சினா | மிஞ்சி | மேலான மிஞ்சி |
| மிஞ்சியை | கழற்ற | எனக்கு |
| ரொம்ப | நாளாச்சு | |
| பாதசரம்போட | வந்த நான் | பாதகத்தி மூலையிலே |
| நான் உடுத்தும் | கறுப்பு சேலை | நான் உடுத்துமுந்தி |
| தங்க நிறம் | நானுடுத்திப் | புறப்பட எனக்கு |
| உலகம் | பொறுககலையோ | |
| நான் உடுத்தும் | பட்டுச்சேலை | எனக்குக் கரைக்கட்டு இரண்டுநிறம் |
| கதம்பப் பொடி | மணக்கும் | எனக்குக் காய்ச்சேறு பூமணக்கும் |
| இநதப்பூமணக்கும் | சீமையிலே | என் சாமி உங்களைப் |
| பொருந்தி | இருக்கத் | தேடுதனே! |
| தெற்கே | மழைபெய்ய | நம்ம தென்னயெல்லாம் தணணீர்கட்ட நான் |
| வடககுத்தி | ராஜாபெண்டாட்டி | உங்களை நான் |
| வழியெல்லாம் | தேடுதேனே! | |

Scanned by TapScanner

# அவன் கண்ட கொலை ....

ம. கந்தசாமி
III B. Com.,

அவன் மனதில் ஒரு எண்ணம் துளிர்விட்டுக் கொண்டிருந்தது அது என்னவெனில், எப்படியும் ஒரு கொலைகாரனை அல்லது கொள்ளைக்காரனைக் கண்டு பிடித்து துப்பு கொடுத்து தன் பெயரைப் பத்திரிக்கையில் வர வைக்க வேண்டு மென்பதேயாகும். அதனால் பரிசுகள் கிடைக்கும் என நம்பினன். இதே சிந்தனை யுடன் கற்பனையில் மிதந்த வண்ணம் உறங்கி விட்டான். ராஜா

திடீரென்று கட்டிலிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தான். ஏன் ...? திடீ ரென்று ஒரு தீனமான அலறல் சப்தம் கேட்டதுதான காரணம்

அவன் மூளை ஆயிரம் வாட்ஸ் பல்பு போல் பிரகாசித்தது அவன் மனம் எதையோ நினைத்து குதூகளித்தது.

" இன்று என் உள்ளுணர்வு என்னவோ சொன்னது அது சரியாகத்தான் இருக்கிறது " என மனதில நினைத்துக் கொண்டான். அதே சமயம் கீழேயிருந்து சில சப்தங்கள் கேட்டன, கூர்ந்து கவனிக்கையில் ....

" டேய் .. முனியா வாயை இருக்கிப் பொத்திக்கொள் ஒரு சப்தமும் வெளியில் வரக்கூடாது தெரிஞ்சுதா .,.

" சரிங்க ... "

" டேய் ராமு அந்த அரிவாள கொண்டு கழுத்துல ஒரேபோடா போடு ... சீக்கிரம் களுத்த வெட்டுடா ... "

அதைத் தொடர்ந்து ... "வீச்" என்ற சப்தமும் உடல்கீழே விழும் சப்தமும் கேட்டது.

ராஜா சன்னல் வழியே வெளியில் எட்டிப்பார்த்தான் வெளியில் இருட்டாக இருந்ததால் அவன் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. சப்தம் எங்கிருந்து வருகிறதென்று பார்த்தான் அது ஒரு ஹோட்டல் பக்கமிருந்து வந்தது.

அவர்களை எப்படியும் கையும் களவுமாக பிடிக்க நினைத்த ராஜா போன் இருக்கும் இடத்திற்கு சென்று. போலீஸுக்கு போன பண்ணினன்.

" ஹலோ ! ... போலீஸ் ஸ்டேஷனு ... இங்க ஒரு கொலை நடந்திருக்கு சீக்கிரம் வாங்க ... "

" நீங்க எங்கிருந்து பேசறீங்க .. " இன்ஸ்பெக்டர் குரல் கொடுத்தார்

Scanned by TapScanner

'' சரவண விலாஸ் ஹோட்டல் அருகில் நேத்தாஜி ரோடு 4 ஆம் நம்பர் வீட்டிலிருந்து பேசுகிறேன் . . . சீக்கிரம் வாங்க ''

'' நாங்க இதோ வந்திட்றோம் . . நீங்க அவங்களை கவனிச்சுக் கிட்டிருங்க சரி வச்சிடறோம்.

போனை வைத்து விட்டு அவர்களைக் கவனிக்க மாடியிலிருந்து கீழ் இறங்கினான். கையில் உள்ள டார்ச்சைக் கொண்டு பாதையைப் பார்த்தபடி நடந்தான். அப்பொழுது தான் அவர்கள் கிளம்பிக் கொண்டிருந்தனர்.

தலைப்பாகையணிந்திருந்த ஒருவன் ''டேய் ராமு நீ மண்டையையும் உடலையும் சாக்கில கொண்டு போ நான் பின்னால் வரேன ''

மண்டையையும் உடலையும் சாக்கில் போட்டு எடுத்துச் செல்வதை கண்டான் ராஜா. மூவரும் ஒருவர் பின் ஒருவராக தெருவை விட்டு சென்று ஒரு குடிசையினுள் நுழைவதைப் பார்த்து விட்டு தன் டார்ச்சால் கொலை நடந்த இடத்தைப் பார்த்தான் அங்கே சிவப்பு ரத்தம் குளமாகப் பெருகியிருந்தது.

அவன் பார்த்துக் கொண்டிருந்த அதே சமயம் ஒரு ஜீப் வந்தது அதிலிருந்து இறங்கிய போலீஸ்காரர்களில் ஒருவர் வேகமாக ஓடிவந்து '' ராஜாவை இருக்பிடித்துக் கொள்ள ராஜா திமிறினான.

அவனைப் பிடித்திருந்த போலீஸ் ''சார் சார் சீக்கிரம் திமிறுகிறான் சார்'' என சப்தம் போட அருகில் இருந்த மற்ற போலீஸ்காரர்கள் அவன வாயைத் திறப்பதற்குள் லத்திக்கம்பால் நன்ருக அடிதது விட்டனர்.

சார் . . . சார் நான் கொலைகாரன் இல்லை சார் நான் தான் உங்களைக் கூப்பிட்டவன் '' எனச் சொன்னவுடன் ராஜாவை விட்டு விட்டனர்.

'' ஸாரி சார் . . தப்பு நடந்து விட்டது . . சரி கொலைகாரர்கள் எங்கே என டி. எஸ். பி. வினவ.

'' சார் கொலை இங்கேதான் சார் நடந்தது இந்தாபாருங்கள் ரத்தம் . . '' கூறி டார்ச்சால் அடித்துக் காட்டினான்.

'' அதுசரி பிணம் எங்க'' வினவினார் இன்ஸ்பெக்டர்.

''அதோ விளக்கு எரியதே அந்த குடிசை வீட்டிலதாங்க இருக்காங்க வாங்க போகலாம் ''

ராஜாவும் போலீஸ்காரர்களும் குடிசையை அடைந்தனர் அப்பொழுது உள்ளேயிருந்து வெளிவந்த பேச்சுக்குரலை அனைவரும் கேட்டனர்.

'' டேய் அந்த உடலைத் துண்டு துண்டா வெட்டு மண்டையைத் தனியா வைச்சுக்க . . ''

Scanned by TapScanner

மேலும் தாமதிக்க விரும்பாத இன்ஸ்பெக்டர் கதவைத் தட்டி "யாரது உள்ளே இருக்கிறது. சீக்கிரம் திறங்க ம், . ம்''

உள்ளே இருந்தவர்கள் திடுக்கிட்டு பின் சமாளித்து "யார் கதவைத் தட்டுறது" என்ருன் ஒருவன்

"நாங்க போலீஸ் வந்திருக்கோம் மரியாதையா சரணடைங்க"

உள்ளேயிருந்த முனியன் ஒலேப்பாயைக் கொண்டு வெட்டிய உடலை மூடி விட்டு கதவைத் திறந்தான்!

படாரென்று மின்னல் போல் நுழைந்த போலீஸ்காரர்கள் மூவரையும் பிடித்துக் கொண்டனர்.

"கொலேயா பண்றீங்க கொலே . . . உங்களே அரெஸ்ட் பண்ணுகிரும்.

"என்னங்க நீங்கஒன்னு எங்க தொழிலே கொலே செய்யறது தானுங்க கொலேபண்ணலேன்ன எங்க வயித்துப்பாடு கழியாதுங்களே என்ன பணறது . .'!

"செய்யறதையும் செஞ்சுப்புட்டு திமிருவா பேசுறீங்க"

"என்னங்க சொல்றீங்க !' என்ருன் முனியன்.

"இன்னேக்கு யாரைடா கொலே பண்ணுணீங்க '!

"ஒருத்தரையும் இல்லீங்க சாமி . . அது வேறங்க . ."

"கான்ஸ்டபிள் 109 அந்த ஒலேப்பாயை நகர்த்தி இவங்களுக்கு விளங்க வை".

"அடையாளம் தெரியக் கூடாதுன்னு துண்டு துண்டாவா வெட்டுறீங்க . .

"இல்லீங்க சாமி . . . அது வங் . ,"

"அடச்சீ சும்மாகிட . ."

அதே சமயம் கான்ஸ்டபிள் ஒலேப்பாயை விலக்க அனேவரும் அதிர்ச்சி அடைகின்றனர் உள்ளே இரண்டு உயிரற்ற பிணங்கள் இருந்தன

அதைப் பார்த்த போலீஸ்காரர்கள் மூவரையும் விட்டு விட்டு விலகி நின்றனர்,

"மிஸ்டர் உங்க பேச்சைநம்பி வந்தது ரொம்பத் தவறு எங்களே ஏமாற்றி எங்க நேரத்தை வீணுக்கிட்டீங்க உங்களே தான் அரஸ்ட் பண்ணனும்" என்ருர் இன்ஸ்பெக்டர் "சாரிசார் . ." என்று மிடறு விழுங்கினுன் ராஜா.

உனக்கு ஏற்கனவே எங்க போலீஸ்காரர்கள் தண்டனே கொடுத்தாச்சு அதனுல் உங்களே விட்டுவிடரும" என்று சொல்லிவிட்டு போலீஸ்காரர்களுடன் டி. எஸ். பி. சென்று விட்டார்.

அதேசமயம் உயிறற்றுக்கிடந்த இரண்டு பிணங்களின் ஆட்டு மண்டைகள் அவனேப் பார்த்து சிரிப்பது போல் இருந்தது.

(முற்றும்.)

Scanned by TapScanner

# சிங்கத் தமிழும் தென் தமிழ் நாடும்

அ. குமரவேல்ச்சாமி
இளங்கலை வணிகவியல் இரண்டாமாண்டு.

பழந் தமிழர்
புகழ் பெருமை பாட வைக்கும்
பழந் தமிழ் நாடே
புலவர் பலரை பெற்றெடுத்து
புதுக் காவியம் பல படைத்து
புத்துணர்ச்சி புணர வைத்த
நல்ல தமிழ் நாடே !
பவளப் பாடல்கள் பல தந்த
பாரதியாரைப் படைத்த
பாரதத் தமிழ் நாடே !
முப்பெரும் பேரரசால விளைந்த
முத்தமிழ் நாடே !
வாளெடுத்துப் போர் செய்த
வீரர்கள பலர் பிறந்த
வஞ்சித் தமிழ் நாடே !
காப்பியச் சுவை நலம் கனிந்
தொழுகும் வண்ணம காவியம் படைத்த
காஞ்சித் தமிழ் நாடே !
கற்புடைத் தெய்வம் கண்ணகி
பிறந்த கன்னித் தமிழ் நாடே !
தமிழ்ச் சங்கங்கள் பல
உருவாக்கிய சங்கத் தமிழ் நாடே !
பல்லாயிரம ஆண்டுகளாக
பாரில் பவனி வரும்
பழந்தமிழ் நாடே !
நீ வாழ்க ! நின் புகழ் வாழ்க.

# இந்தியா என்பது இவ்வளவு தான்

எஸ். மோகன் குமார்
I M.A.,
Roll No. 1409

**முன்னுரை !**

ஆசியாவின் தென்பகுதியில் அமைந்திருப்பது தான் இந்தியா - இதன் மூன்று புறமும் கடலாலும், ஒரு புறம் மலையாலும் சூழப்பட்டு தீபகற்பமாக திகழ்கிறது. இங்கு பலவித நாகரீகங்கள் தோன்றி, வளர்ந்து, மறைந்து செயல் பட்டுக் கொண்டும் இருக்கின்றன. பல்வேறு வம்சத்தை சார்ந்த அரசர்களும் ஆட்சி செய்து வந்துள்ளனர். வெளிநாட்டவர்களும் இந்தியாவை ஆட்சி செய்து வந்துள்ளதை நாம் காணமுடிகிறது. வந்தோர்க்கு எல்லாம் வாழ்வளிக்கும் பூமியாக இருந்ததால் தான் 20ம் நூற்றாண்டு வரையிலும் அடிமைகளாக இருகக நேர்ந்தது. அறிஞர்களின் அறிவுரைகளின் மூலமும், தூண்டுதலாலும் சுதந்திரம் பெற முயன்றது. காலம் அவனுக்கு உறுதுணையாக இருந்ததால் வெற்றியும் பெற்று வாழ்க்கையில் முன்னேற முடிந்தது.

**19ம் நூற்றாண்டு முன் இந்தியா**

மொகலாயர்கள் பல நூற்றாண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்யவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பல நூற்றாண்டுகளாக ஆட்சி புரியவும் இந்தியர்கள் விட்டுக் கொடுத்தனர். இவர்களுக்கெல்லாம் முன்பு பலவித நாகரீகங்களின் கட்டுப் பாட்டில் இந்தியா இருந்தபடியால், முன்னேற்றம் அடைய முடியவில்லை. பழங் காலத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் ஒற்றுமையின்றி இருந்தபடியால் அன்னியர்கள் எளிதில் இந்தியாவை கைபபற்றி ஆட்சி செய்ய முடிந்தது. 18ம் நூற்றாண்டின் தொடக்கததில் தான் தங்களின் நிலையை உணர்ந்தனர். சுய ஆட்சியை விரும்பிய இவர்கள் ஆங்கிலேயரை கடுமையாக எதிர்த்து போரிட்டனர். தியாக உள்ளங்களின் தொண்டு எண்ணிலடங்காது. கடைசியாக இருபதாம் நூற்றாண்டு தொடக்கததில சுதந்திரமும் பெற்றனர்.

**விடுதலையும், குடியரசு நாடாகுதலும்**

பல நூற்றாணடுகள் அடிமைகளாக வாழ்ந்து வந்த இந்தியர்கள் 18ம் நூற்றாண்டில் தஙகளின நிலையை அறிந்தனர். ஒற்றுமையே வெற்றிக்கு வழி காட்டும் கருவி என்பதை அறிந்து ஒன்றுபட்டு வாழவும், அன்னியரை எதிர்த்து போரிடவும் துணிந்தனர். இதன் அடிப்படையில் தான் தென்னிந்திய கிளர்ச்சி (1801), வேலூர் கிளர்ச்சி (1806), சிப்பாய் கலகம் (1857) ஆகியன தோன்றி மக்களின் நிலையை ஆட்சியாளர்களை அறிய செய்தது. பெரும் தலைவர்களான கோகலே, பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார், படேல், மோதிலால் நேரு, காந்தி, ஜின்னா, ஜவஹர்லால் நேரு மற்றும் பலரும் போராட்டங்கள் நடத்த ஜனங்களும் இவர்களுக்கு ஆதரவளித்ததால் ஆங்கிலேயன் ஆகஸ்டு 15, 1947ல் சுதந்திரம் கொடுத்தான். பின்னர் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு ஜனவரி 26, 1950ல் இந்தியா குடியரசு நாடு என அறிவிக்கப்பட்டது. தங்களை தாங்களே ஆட்சி செய்து கொள்ளும் ஆற்றலை வளர்த்து கொண்டான் இந்தியன்.

Scanned by TapScanner

## அரசியலமைப்பு சாசனம்

சுதந்திரம் பெற்றவுடன், தங்கள் நாட்டுக்கென தனியாக அரசியலமைப்பை வடிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இதில் பலதுறைகளை சேர்ந்த 300 உறுப்பினர்களுக்கும் அதிகமானோர் நியமிக்கப்பட்டனர். இதில் அம்பேத்கார் தலைவராக நியமிக்கப்பட்டார், இவர்கள் அனைவரும் பல நாடுகளில் (ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா மற்றும்பல) அரசியலமைப்புகளை ஆராய்ந்து, தங்கள் நாட்டிற்கு தேவையான கருத்துக்களை பொறுக்கி எடுத்து அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தனர். இறுதியில் நெகிழத் தன்மையுடனும், ஒற்றையாட்சி அல்லது இரட்டையாட்சியா என்று அறியாத அளவுக்கு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் மூலம் ஜனவரி 26, 1950ல் இந்தியா குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப் பட்டது. இன்றுவரை இந்திய அரசியல் சாசனம 56 முறை திருத்தப்பட்டுள்ளது.

## நிர்வாக முறை

இந்திய அரசியல் சாசனம் குடியரசு தலைவருக்கு அதிக அதிகாரம் அளித்துள்ளது. சில சிறப்பு அல்லது அவசர அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவர் பிரதம அமைச்சரையும், அமைச்சர்களையும் நியமிகக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். இவர்களின ஆலோசனையின் பேரில் அனைத்து நிர்வாகங்களையும் செய்ய வழிவகுக்கப்பட்டது. பாராளுமன்றததை கூட்டவோ, கலைக்கவோ, ஒத்திப் போடவோ இவரால் முடியும். பாராளுமன்றம், லோக்சபா, ராஜ்ய சபா என்ற இரு பிரிவுகளும், பலதுறைகளுக்கு தனித்தனி இலாககாக்களும் பிரித்து தரப்பட்டுள்ளன. லோக்சபா உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகவும், ராஜ்சபா உறுப்பினர்கள் மாநிலங்களின் பிரதிநிதியாகவும் இருந்து ஆட்சி செலுதத வகைசெய்யப்பட்டுள்ளது. பொதுவில் பிரதமரே அதிக அதிகாரம் உடையவராக இருப்பதால், குடியரசுத் தலைவர் பெயரளவிற்கே தலைவர் என கருதப்படுகிறார். இந்தியாவின முதல் குடியரசுத் தலைவராக இராஜேந்திர பிரசாத்தும், முதல் பிரதமராக ஜவஹர்லால் நேருவும் தேர்வு செய்யப்பட்டு ஆட்சி செய்தனர்.

## செயல் திட்டங்கள்

மக்களின் நலன், நாட்டின் நலன் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு பலவித திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஐந்தாண்டு திட்டங்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பிற்படுததப்பட்ட,தாழ்த்தப்பட்ட பழங்குடி மககளுககு சலுகைகள் வழங்கப்பட்டன. இன்றும் வழங்கப்படுகின்றன. சமுதாய, பொருளாதார, அறிவியல வளர்ச்சிக்கும் பலதிட்டங்கள்தீட்டப்பட்டு நடைமுறைககு கொண்டுவரப் பட்டன. ஐந்தாண்டு திட்டதிற்காக தேவைப்படும் செலவுத் தொகை பிரிதது வைக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றன. அத்தியவாசியத் தேவைகளையும்நிவாத்தி செய்யவும் முடிகிறது.

## ஆட்சியாளர்களின் நிலை

மககளிடம் வாககுகளை பெற்று ஆட்சி பீடம் ஏறும் அரசியல வாதிகள் பதவியில் அமர்ந்தவுடன் மக்களை மறந்து தங்களின் தேவைகளை பூர்தது செய்யவே நேரத்தை செலவழிககப்படுகின்றனா. மககளுககு சேவை செய்ய அனுப்பப்பட்டவர் கள் அவர்களை எண்ணிப்பார்ப்பது கூட கிடையாது. கட்சிகள் அடிப்படையில் பல

Scanned by TapScanner

பிரிவுகளாக பிரிந்து, தங்கள் கட்சிகளுக்கு தேவையான சலுகைகளை பெறவே துடிக்கின்றனர். தற்காலத்தில் பணம் இல்லாமல் எக்காரியத்தையும் சாதிக்க முடியாத நிலை இப்படிப்பட்ட ஆட்சியாளர்களினால் உண்டானது. எதிர் காலம் இவர்களால் என்ன ஆகுமோ யார் கண்டது?

## மாநிலங்களின் பங்கு

மத்திய அரசிற்கு கட்டுப்பட்ட அரசாகவும், ஆனால் தங்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்காமலும், இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்து செயல்பட இந்திய அரசியலமைப்பு சாசனம் வழி வகுத்துள்ளது. மேல்சபை, கீழ்சபை என்ற இரு அமைப்புகள் அமைத்துக் கொண்டு ஆட்சி செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பிற்கு புறம்பாகவோ, அதன் அதிகார எல்லையை மீறினாலோ ஓர் மாநில அரசு செயல்படுமேயானால் அதனை பதவி நீக்கம் செய்து, ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்த குடியரசு தலைவருக்கு அதிகாரம் உண்டு மக்களின் பிரதிநிதியே முதலமைச்சராகவும், அமைச்சர்களாகவும் முடியும். மத்திய அரசு இவர்களின் நிர்வாகத்தை கண்காணிக்க கவர்னர்களை நியமனம் செய்ய அதிகாரம் உண்டு. இவருடைய கட்டுப்பாட்டின் அடிப்படையில் தான் மாநிலங்கள் இயங்கி வருகின்றன.

## உலக நாடுகளில் இந்திய நிலை

வெள்ளையரை வெளியேற்றிய பின்னர் ஆட்சியை பிடித்த இந்தியர்கள் படிபடியாக எல்லாத்துறைகளிலும் முன்னேறியுள்ளனர். வல்லரசுகளையே மிஞ்சும் அளவிற்கு சக்தி பெற்ற நாடாக இருக்கிறது. அணு ஆயுத உற்பத்தியிலும் இந்தியாவின் நிலை போற்றதக்கதாகவே அமைந்துள்ளது. கூட்டுச்சேரா நாடுகளின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. சுமார் 150நாடுகள் இக்கூட்டமைப்பில் இருக்கிறது. நடுநிலை கொள்கையில் எள்ளளவும் மாறாது நாட்டு, வளர்ச்சிக்காக பாடுபட்டு வருகிறது உலக நாடுகளுடன் நட்புடன் பழகி வளரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக திகழ்கிறது. பகை நாடுகளுடன் நட்புடன் இருக்கவிரும்புகிறது. ஜனநாயக மரபுகளை கடைப்பிடிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. எல்லா துறைகளிலும் உலக நாடுகளுடன் போட்டிபோட்டு முன்னேறி வருகிறது.

## மாணவர்களின் நிலை

வளர்ச்சி நோக்கி செல்லும் இந்தியாவானது கல்வியில் ஓரளவே முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கு காரணம் அரசியலில் மலிந்து கிடக்கும் ஊழல்களே ஆகும். வருடந்தோறும் கல்வி கற்று, வெளிவுலகத்தை நம்பிவரும் பல லட்சக்கணக்கான மாணவர்களுக்கு போதிய வேலை வாய்ப்புகள் கிட்டவில்லை. அவர்களுக்கு பயிற்சி அளிக்க கூட அரசால இயலவில்லை. கல்வி விற்பனை பொருளாக மாறிவருகின்ற சூழ்நிலையைதான் எங்கும் காணமுடிகிறது. மாணவர்களின் அறிவுக்கும், திறமைக்கும் போதிய மதிப்புகள் கிட்டவில்லை. இதற்கு காரணம் ஆட்சியாளர்களின் தீண்டதாகாத செயல்களும், மக்கள் தொகை பெருக்கமே ஆகும். பணத்தின் மூலமே வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு, அவர்களின் தகுதிகேற்ப வேலை கிடடுவது இல்லை. இவற்றையெல்லாம் அரசு களைய முன் வருமேயானால் ஓரளவு கல்வித்தரத்தை நிலைநாட்ட முடியும்.

Scanned by TapScanner

### சமூக, பொருளாதார, அறிவியல், அரசியல் மற்றும் ஏனைய துறைகளின் வளர்ச்சி

இந்திய அரசியலை காணும்போது ஓர் முன்னேற்றத்தின் ஏணிப்படியாகவே இருக்கிறது. ஆட்சி பொறுப்பை ஏற்கும் தலைவர்களும உலக நாடுகளின் மத்தியில் இந்தியாவின் நிலையை உயர்த்தவும், இருக்கின்ற புகழை தக்க வைத்துக் கொள்ளவும் பாடுபட்டு வருகின்றனர். சமூகத்தை பொறுத்தமட்டில் மத சண்டைகளும், சாதிச்சண்டைகளும்கணக்கிலடங்காத வண்ணம் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. இவை இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலை வைக்கவும் தயங்காது என்பது மட்டும் உறுதியாகும். பொருளாதாரத்தை பொறுத்த மட்டில் இன்னும் பின்தங்கியே உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு இயற்கை அமைப்புகளும் ஒரளவிற்கு ஒத்துழைக்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதே. விஞ்ஞான வளர்ச்சியில் இந்தியர்கள் சிறந்த முன்னேற்றத்தை அடைந்து உள்ளனர், அணு ஆயுத உற்பத்தியில் தன்னிறைவை எட்டும் அளவு, தேவையை பூர்த்தி செய்துள்ளனர். ஏனைய துறைகளிலும் ஓரளவு வளர்ச்சி காணப்படுகிறது. எல்லாவற்றிலும் தன்னிறைவு பெற்ற நாடாக மாறுவதற்கு இன்னும பல ஆண்டுகள ஆகலாம். அதற்கு அதிக அளவு வாய்ப்புகள் காத்துள்ளன.

### எதிர்காலத்தில் இந்தியா

வருகின்ற காலங்களில இந்தியாவும் ஓர் வல்லரசாக மாறக் கூடிய சூழ்நிலைகள அதிகம் காணப்படுகிறது. தற்சமயம் அணிசேரா நாடுகளின் தலைமை பொறுப்பை ஏற்றுள்ளதை காணும்பொழுது இந்தியாவின் நிலை நன்கு தெளிவாகும். பின்னர் வரும் காலத்தில் உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் முன்னணி நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கும் என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. ஆட்சி பொறுப்பை ஏற்பவர்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்கினால் நாட்டின் மேன்மை வெளிவுலகிற்கு தெளிவாக தெரியவும், முன்னேற்றம் உண்டாகவும் வழி பிறக்கும் இல்லையேல் பிறநாடுகளை நம்ப வேண்டிய கட்டாயம் உருவாகும் என்பதில் ஐய்யமில்லை.

### மதிப்பீடு

பொதுவில் இவையனைத்தையும் காணும்பொழுது இந்தியா என்பது இவ்வளவு தானா? என்பது பற்றி கேள்வி எழுப்புவதில் நமக்கு ஆச்சரியமில்லை. அறியாதோர் இந்தியா என்பதுதான் உலகம் என நம்ப வாய்ப்புண்டு, மேலும் படித்தவர்களிலும் சிலர் இவ்விதம் நினைக்க சூழ்நிலைகள் ஒத்துழைக்கலாம். இன்றைய உலகத்தாரால் இதுதான். இவ்வளவுதான் இந்தியா என்று படம் பிடித்து காட்டப் படுகிறது. உலகம் மெச்சும் வண்ணம் இந்தியா முன்னேற வேண்டும் என்பதில் நாம் அனைவரும் ஒத்த கருத்து உடையவர்களாக இருப்போம் ஆக.

Scanned by TapScanner

# நங்கூரம் போட்ட நந்தவனம்

கி. சு. கிருஷ்ணசாமி
[சமத்துவன்]
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்

பாண்டின் தேசத்துப்
பௌர்ணமிகளின் போது
புதர்களுக்கிடையே சிரித்தது
ஒரு
புல்லாங்குழல் கிராமம்

அந்தப்
புதர்களைக் கால் முறித்து
பொசுக்கி அகற்றி
அங்கு
மனிதச் சோலைகளை
மலரச் செய்தது
விஜய நகரப் பேரரசு

ஆந்திராவில் வீசிய
அரசியல் சூறாவளியில்
நசுங்கி விடாமல்
சில தென்றல்கள்
நகர்ந்து வெளியேறி
இங்கு வந்து
நங்கூரம் போட்டு
நந்தவனம் வளர்த்தன.

வரலாற்றின் மதியத்தில்
இவ்வூர்
மதுரை நாயக்கரின்
வெண்குடைக்கு
வாகை சூட்ட
வாளேந்திப் போரிடும்
பாளையமானது,

பின்
தனித்தனி மலர்களாய்த்
தனித்திருந்த சிற்றூர்கள்
மாலையாய் ஒன்றாகி
ராஜபாளையமானது.

Scanned by TapScanner

குற்றால நங்கை
வருடந்தோறும்
பருவ மேடைகளில்
சலங்கை கட்டிக்
கொள்ளும் போதெல்லாம்
அந்த
சாரலின் விரல்கள்
எங்களது
உணர்வுகளின் ஜன்னலை
உரசி
மெல்ல சுரம் பிரிக்கும்.

கம்பருடன்
கார்த்திகையின்
கீர்த்தி சொல்லும்
கனகமலை சஞ்சீவி

ஐயனார் கோயிலின்
அமுத நீர்வீழ்ச்சி
மேற்குத் தொடர்ச்சி மலையின்
மேனிவளம்
இவை எம்
நகர எழிலின் கிளைகள்

பக்திப் பகலுக்குப்
பால் வார்த்த
சூரிய ஆண்டாளின்
சீரிய வாசல் மிளிர்
ஸ்ரீவில்லிபுத்தூர்
அருகில் கண் மலர்ந்த
திருநல் நகரம்

இன்றைய
தேசிய விழுதுகளில்
வேர்களை
ராஜபாளையம்
அன்றே விட்டிருந்தது.

அந்நிய பாதமுட்கள் நம்
மண்ணில் தைத்தபோது
வெறுப்பு நெருப்பைத்தன்
கண்ணில் சுமந்தது
இக்கால்கோள் நகரம்

ஆங்கில நாகம்
ஆதிக்க விஷம் கக்கியபோது
சீறியாய் சீறியது
இக்கீர்த்தி நல்லூர்

Scanned by TapScanner

வெள்ளையனுக்குக்
கொள்ளிக் கட்டை செய்தது
ராஜபாளையத்துப்
பட்டறையில் தான்.

ஆங்கிலேயரின்
தீங்கினை எதிர்த்து
கண்ணகியின் சிலம்பினைப் போல்
கர்ஜித்தது
ராஜபாளையம்

பாரதமாத
சுதந்திரப் பூச்சூடி
சுமங்கலியானபோது
அவளுக்குக்
குங்குமத் திலகம் வைத்து
குதூகளித்தது ராஜபாளையம்

வங்கக் கடலில்
இந்தியச் சூரியன்
எழுந்து நடந்த போது
உத்தமா குமாரசாமி
உயர்ந்தார் முதல்வராய்.

சுதந்திர இந்தியாவின்
சுடர் விளக்கிற்கு
மண்ணெண்ணை வழங்கி
மாண்பு சேர்த்தது
எங்கள் மண்டலமே

மாவும் நாயும்
எங்களூர் புகழ்
மகுடத்தின் வைரங்கள்
இவ்வூர்
இந்திய இலக்கிய நெஞ்சங்களின்
வேடந்தாங்கல்.

கல்வியும் கொடையும் தாம்
உள்ளூர் கலாச்சாரத்தில்
உயிரும் கண்ணும்

இங்கு
ஆலீவ் மரங்களை
நாளும் வளர்த்து
உலகச் சிந்தனையுடன்
உலவும் அறிஞர் குழு
வாழிய வாழியவே.

Scanned by TapScanner

# உலக சமாதானம்

செ. செம்புலிங்கம், B.A. II
Roll No. 133

மாசில்லா மனத்திலே ஊறிட்ட
அமைதி யெனும் பேரூற்றே !

பகைமை அகற்றி நட்பை வளர்த்து
மனித குலத்தை இணைக்கும் பாலமே !

நாட்டு முன்னேற்றம் வளர்ந்திட
உதவிடும் நற்ப் பயனே !

மனிதகுலம் ஒன்று பட்டு வாழ
வழி வகை செய்யும் விண்மீனே !

காலைக் கதிரவனால் மறையும் பனிபோல
பகைமையும் விட்டொழியுமே !

ஒற்றுமையாய் நாம் வாழ்ந்திடவே
நெறிமுறை தந்த மணி விளக்கே !

நிறத்தில் வேறுபட்டாலும் குலத்தில் ஒன்று !
மணத்தில் வேறுபட்டாலும் பூக்களில் ஒன்று !

பொறுமை, இறக்கம், அன்பையுமே
அதன்படி ஒழுகுவோம் வாழ்வினிலே !

அன்பரே ! நண்பரே ! வாரீர் !
சமாதானப் புறாவை பறக்கவிடுவோம் !

Scanned by TapScanner

# மாணாக்கரே விழிமின்

மு. ஒ. இராசசேகரன் எம். ஏ., (தமிழ்) எம். ஏ., (வரலாறு) எம். எட்.,
தமிழ்ப் பேராசிரியர்

மாணாக்கர் என்பாரே மாண்பை ஆக்குவோர்
மாசெல்லாம் மனத்தினின்று மறைய வேண்டும்
வாணாளை வீணாளாய் ஆக்க வேண்டாம்
வம்புகளில் வழக்குகளில் வழுக்க வேண்டாம்
தூணாகத் துரும்பதனை ஆக்க வேண்டாம்
தூக்கத்தைச் சுகமென்றே எண்ண வேண்டாம்
காணாதே கேளாதே தீயதை என்றும்
காணநேரின் காத தூரம் ஓட வேண்டும்

அரசியலாம் புயலதனில் அகப்பட வேண்டாம்
அடிமையெனப் பழக்கத்தில் ஊற வேண்டாம்
நரம்புகளில் சூடேற்றித் திரிய வேண்டாம்
நங்கைகளைத் தேடி தினம் அலைய வேண்டாம்
வரம்புகளை மீறிடவே நினைக்க வேண்டாம்
வியாதியெனும் வலைகளிலே வீழ வேண்டாம்
பரம்பொருளாம் பரமனையே நினைத்தல் வேண்டும்
பகுத்தறிவுப் பயன்களையே பகிர்தல் வேண்டும்

சீட்டுகளைக் கைகளாலே தொடவே வேண்டாம்
சுருள்புகைகள் விட்டிடவே விரும்ப வேண்டாம்
நாட்டு வெடி குண்டுகளை நம்ப வேண்டாம்
நாசமது விளைத்துவிடும் நினைத்தல் வேண்டாம்
ஓட்டுகளில் கள்ள ஓட்டுப் போடவேண்டாம்
ஏய்ப் போரின் வலைகளிலே வீழ வேண்டாம்
ஏடு கற்றுத் தேர்வுகளை எழுத வேண்டும்
ஏமாற்றும் வேலைகளில் இறங்க வேண்டாம்

மதுப்பழக்க அடிமையாய் மாற வேண்டாம்
மனத்தினிலே சஞ்சலங்கள் கொள்ள வேண்டாம்
புதுப்பழக்க அடிமைகளில் மூழ்க வேண்டாம்
பொடிப்பழக்க வழக்கங்கள் புகுத்த வேண்டாம்
முதுமைதனை இளமையிலே அடைய வேண்டாம்
மூத்தோரின் சொற்களையே மறுக்க வேண்டாம்
புதுப்படங்கள் பார்த்துவிடத் துடிக்க வேண்டாம்
பகுத்தறிவைப் பாதிப்பின் நீக்க வேண்டும்

Scanned by TapScanner

மனத்தினையே ஒருநிலையாய்ப் பற்ற வேண்டும்
முனிவர்கள் போன்ற நிலை கொள்ள வேண்டும்
தினந்தோறும் முனிவர்கள் செய்யும் தொழுவார்
கடமையாய் மாணாக்கர் கல்வி கருதுவர்
கல்வியினையே குறிக்கோளாய்க் கொள்ள வேண்டும்
கல்லூரி மேல் தொடர்ந்துவரும் கல்வி கைக்கொள
இலக்கினையே உயர்த்திடவே உழைக்க வேண்டும்
ஆர்வங்கள் கனவுகள் கொள்ள வேண்டும்

தூக்க கலக்கம் வகுப்பறையில் கொள்ள வேண்டாம்
துக்கமில்லை வந்து விடும் எதிர்காலத்தில்
நாக்கூசும் சொற்களையே நவில வேண்டாம்
நீ சொன்ன நாவிலமே தூற்றும் ஓர்நாள்
வாக்கினிலே இனிய சொற்கள் செப்ப வேண்டும்
வள்ளுவரின் வாக்கினிலே தோய வேண்டும்
நோக்கங்கள் உயர்வுடையதாய் இருக்க வேண்டும்
நல்லோரின் நட்பதனை நாட வேண்டும்.

குருபக்தி கொண்டவராய்த் திகழ வேண்டும்
கவனமுடன் கேட்பதற்கு மனமும் பொருந்தும்
தேர்வதனில் மதிப்பெண்கள் பெறுவதற்கும்
தொடர்ந்துதவும் குருபக்தி கொண்டிருந்தால்
பருவத்தின் பூரிப்பில் பாதை மாறி
போதைதரும் மருந்துகளில் மூழ்க வேண்டாம்
தெருச்சுற்றும் பழக்கங்கள் கொள்ள வேண்டாம்
தீரட்புத் தொடர்பதனைத் தவிர்க்க வேண்டும்

குதர்க்கங்கள் குத்தல்கள் கூற வேண்டாம்
கொலைகளவு செய்வாருடன் சேர வேண்டாம்
விதவிதமாய் ஆடைகளை உடுக்க வேண்டாம்
விலையுயர்ந்த ஆடைகளை ஒதுக்க வேண்டும்
நித்தநித்தம் தந்தைபடும் பாட்டை எண்ணி
நியாயமான செலவுகளைச் செய்ய வேண்டும்
மதவெறியாம் புயலதனில் மூழ்க வேண்டாம்
மனிதனாகப் புனிதனாக மாற வேண்டும்

Scanned by TapScanner

கல்லெறிந்து கண்ணாடி நொறுக்க வேண்டாம்
கார்களையும் ரயில்களையும் கொழுத்த வேண்டாம்
சொல்லெறிந்து கூட்டத்தைக் கூட்ட வேண்டாம்
சேர்க்கை கொண்டுகதவடைப்புச் செய்யவேண்டாம்
பொல்லாங்கு ஒருவரையும் சொல்ல வேண்டாம்
புண்படுத்திப் பிறர்துயரில் மகிழ வேண்டாம்
வில்லங்கப் பேர் வழியாய் வாழ வேண்டாம்
விரோதங்கள் விரைவாகத் தேட வேண்டாம்.

அன்னைபிதா ஆசானைத் தெய்வ மென்று
அனுதினமும் தொழுதெழவே பழக வேண்டும்
மன்னுயிரைக் காத்தற்கே இன்னு யிரையும்
மகிழ்வுடனே கொடுத்தற்கு முந்த வேண்டும்
தன்னலமே இல்லாத தியாகி யாகிப்
பொதுநலமே பேணுகின்ற புனிதனாவாய்
உன்னை எண்ணி வாழ்கின்ற வீடும் நாடும்
உயர்ந்திடவே உன் பங்கைச் செய்ய வேண்டும்.

*
**

## ( பொன் மொழிகள் )

கடலில் பெய்யும் மழை, வயிறு நிறைந்தவனுக்குத் தரும் உணவு, பொருள் படைத்துள்ளவனுக்கு தரும் கொடை, பகலில் ஏற்றிய விளக்கு இவை வீணாகும்.

தீயோர் நட்பைக் கைவிடுக நல்லோர் நட்பை நாடுக, இரவும் பகலும் நன்மையே இயற்றுக. இவ்வுலகின் நிலையாமையை எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பாயாக.

இனிய சொற்கள் பேசுவதால் எல்லோரும் மகிழ்ச்சியடைவார்கள் ஆதலால் இன்சொல் பேசுக பேச்சில் தரித்திரம் எதற்காக ?

## கடன்காரனாக்கிய காதலியே

N. சத்தியகீர்த்தி III B. A.

உன்
காதலுக்காக நான் ஏங்கிய
காலங்களை எண்ணிப் பார்த்தால் - நான்
கடன் காரனாகத் தானிருப்பேன்.
இந்தத் தரையில் வீழ்ந்த மீனை எடுக்க
பார்வை வலை வீசினால்
நீ, என்னைக்
காப்பாற்றி விடலாம்.

## நானும் கடன் காரன் தான்

என்னிடமில்லாத இதயத்தை
உன்னிடம் நான் கேட்பதனால்,
நானும் கடன் காரன்தான்.

## மாற்றமா? ஏமாற்றமா?

உன்னையே எண்ணி
ஏங்கும் என்னைப் பார்த்து
புன்னகையே செய்யும்
இனியவளே , . .
எ (உ)ன்னை . . . நீ
மாற்றுகிறாயா — இல்லை
ஏமாற்றுகிறாயா ?

Scanned by TapScanner

# "மலரைத் தீண்டிய தென்றல்"

M. ஜெயசங்கர் II B. A.

என்
ஈரவிழிகளை
இதார்த்த மாக்கிய
இளவரசியே !

உன்
அங்கங்கள் ஒவ்வொன்றையும்
அழகாக படைத்திட்ட
பிரம்மனுக்கு நான்
நன்றி சொல்ல
ஆசைப் படுகின்றேன்

உன்
பார்வையில்
புதைந்திருக்கும்
பாடங்கள்
எத்தனை எத்தனை . , . !

உன்
செவ்விதழ்களில்
செதுக்கிய கவிதைகளை
என் விழிகள்
அடிக்கடி விமர்சனம்
செய்கின்றது.

வெட்கம் வந்து
உன்னிடத்தில்
விலாசம் இல்லாமல்
தவிக்கின்றதே
முகவரியைக் கொடுத்து
முகத்தில் இருந்து நீக்கிவிடு !

நீ சிரிக்கும் போது
இரட்டைச் சூரியனை
இந்த பூமியில் பார்க்கின்றேன்.

நீ விழிக்கும் பொது
மழையில்லாத
மின்னலை
என் மனதுக்குள்
பார்க்கிறேன்,

பயணத்தின் போது
ஏற்பட்ட பழக்கத்தால்
பறிமாறிக் கொள்வோம்
உன் விருப்பம் இருந்தால்
எதை வேண்டுமானாலும் . . . !



# என்றும் நான் அடிமை..!

M. ஜெயசங்கர் II B. A.,

வேர்வை
முத்துக்களை
முதுகில் சுமந்து கொண்டு
சொததுக்களைத் தேடி
என் தந்தை என்னை
கல்லூரியில் படிக்க வைத்தார்.

கந்தத் துணிகளை
உடுத்திக் கொண்டு
காடுகளில்
கால் கடுக்க
உழைத்து வந்து
காசுகளை
கல்லூரி விடுதிக்கு
அனுபபுகின்றாள்
என் தாய்

வாழ்க்கை வசந்தத்தை
பாலை வனமாக
மாற்றிக் கொண்டு
வனததில் விறகு வெட்டி
வசந்த மாளிகை
எனக்கு கட்டி வைத்தார்
என் அண்ணன்.

பாலை வனத்தில்
சோலை அமைக்க
பாடுபடும் என்
பண்பாளர்களுக்கு
என்றும் நான் அடிமை

'எனது எனது, என்று இருக்கும் ஏழை பொருளை
'எனது' எனது' என்றிருப்பன் யானும் - தனதாயின்
தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்
யானும் அதனை அது

— நாலடியார்

# சோகத்தின் வேகம்

இராசை மா, ப, அசோக்குமார் பி. ஏ.,
இளங்கலை இரண்டாம் ஆண்டு

மொட்டு செடியில் இருந்தால் - அது
மலர்வது உறுதி
ஒரு சிட்டு மனக் கொடியில் இருந்தால்,
காதல் வளர்வது உறுதி
நான் உனக்கு சூடும் பூ.
மலர்வதும் ஒரு முறை
நீ எனக்குத் தரும் காதல்.
வளர்வதும் ஒரு தலைமுறை.
ஆசையில் எடுத்த புல்லாங்குழல் -
ஓசை தருவது எல்லாம் முறை -
ஆனால் இசை தர மறுப்பது,
அதற் கேற்பட்ட என்ன குறை ?
வண்டு ஒன்று பூ வருகில் வரும்போது,
தேன் உனக்குண்டு என ஜாடை போட்டு,
நாட்கள் நிமிடமாய் சென்ற பின்
என் பூவில் தேனில்லை என சாதித்த மலரே !
நான் நாளெல்லாம் இரசித்தது
பூ வெனும் உன் முகம் மட்டுந்தானா !
இறுதியில் மவுனமாய், மௌனம் சாதிப்பது ஏன் ?
நாளெல்லாம் உன் முகம் காண,
நாட்கள் எங்ஙனம் கழியும் - என.
உன் மீது ஒருதலைக் காதலில்
நானிருந்தது எங்ஙனம் அழியும்.
நான் பார்த்தால் நீ பார்க்கிறாய் !
நான் சிரித்தால் நீயும் சிரிக்கிறாய் !
நான் இப்போது பிரிவையும், காதல் உறவையும்.
உன்னோடு நினைத்து கலங்குகிறேன் - ஆனால்
நீ என் கலங்க வில்லை -அன்பே !
நீ சிரிக்கும் போதெல்லாம் மனக்கோட்டை -
- எழுப்பினேன்.

Scanned by TapScanner

ஆனால் ஒரு நாள் நீ பேசிய வார்த்தை
அதை மண் கோட்டை என்றது - அதோடு இல்லாமல்

அக் கோட்டையை கரைக்கும் மழையும் நீயானாய்
அதில் சிக்கிய என்னை கடலில் சேர்க்கும் -
- நதியும் நீயானாய்.

அருகில் வந்து என் உள்ளம் உருகச் செய்து விட்டு
இறுதியில் கபடங்கள் பருகிய தோழி - நீ வாழி!

என்னை காதலன் என அழைக்க வேண்டிய உன -
- உதடுகள்

கயவன் என அழைப்பது தான் என்னை வாழு.

வீழவிடும் முட்கொண்ட முகடுகள்! என நீ உணரு
நீ நீடுழி வாழ்க!

## என் இனிய காதலிக்கு என் காவிய மழை

அன்ன நடையாள் அசைந்து வந்தாள்,
மெல்ல நாணத்தால் இதழ் விரித்தாள்,

புன்னகை, பூ மொட்டு பொன் சிரிப்பாள்
உள்ளத்தை நான் அவளிடம், அளித்து விட்டேன்.

கள்ளியவள் என்னைக் காண நாணுகிறாள்.
காரணம் கேட்டால் கண் கலங்குகிறாள்,

என்னம்மா உனக்கு இந்நிலை என்றேன் !
கண்ணா உனக்கு நான் அடிமை என்றாள்

காய் புளிக்கும் நித்தம் தின்றாள்,
வாய் அளிக்கும் முத்தம் என்றாள் !

காதல் மழை பெய்யவில்லையே - என்றேன்
காவிய மழை பெய்கிறதே! என்றாள்

உன்னை ஓவியம் தீட்டவா என்றேன்
என்னை காவியம் தீட்டி விட்டாயே என்றாள் !

Scanned by TapScanner

## என் இன்பத்தின் துள்ளல்

மனக்குது, மனக்குது மல்லிகை - மனக்குது
சிவக்குது சிவக்குது உன் பூ முகம் - சிவக்குது

பெருகுது, பெருகுது யென் அன்பு - பெருகுது
வளருது, வளருது நம் உறவு - வளருது

வேண்டம்மா - இனி வெறுப்புக்கள் - வேண்டம்மா
இளகுது, இளகுது உன் மனம் - இளகுது

தளருது, தளருது என் மனம் - தளருது
என்னம்மா . . . காரணம் நீ கொஞ்சம் - சொல்லம்மா
சிரித்தாள் - சிரித்தாள் மல்லிகை - சிரித்தாள்

மணப்பாள் . . . மணப்பான் என்னையே -மணப்பாள்
இனி என் பாடு கொண்டாட்டம் தான்

*
**

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

— நாலடியார்

Scanned by TapScanner

# அந்திப் பொழுது

பொ. இராமர் பி. ஏ.,
முதலாமாண்டு

அந்திப் பொழுதினிலே
ஆற்றின் படுகையிலே

தனிமையில் நானிருக்க
தாகமும் வாட்டவே

என்னவள் அன்னம்
என்னையே நோக்கி

சின்னச் சலங்கையுடன்
சிங்காரமாய் நடந்து

நீண்ட குழலினிலே
நீல மலர் சூடி

சோலை வனமாக
அருகிலே வந்து

கன்னத்தில் ஒன்று
கனிவாக தந்தாள்

திருப்பிக் கேட்டாள்
திடமாகக் கொடுத்தேன்,

Scanned by TapScanner

# காவியக் காதலி

அ ) ஸிவர்யா

புதுமுகம் கொண்ட
பாவையே!

உயிரே உனக்காக
என் உணர்ச்சி நாளங்களிலிருந்து
இசைமீட்டு பாடுகின்ற பாடல்

இன்னுமா
உன் செவிகளுக்குக்
கேட்கவில்லை?

என்மீது வீசும் தென்றல்
உன் மூச்சுபட்டு வீசாதா?-என்று
ஏங்கும் இளைஞன நான்

இந்த இனியவனின்
இதயக் கண்ணாடியில்
தெரிவதெல்லொாம
உன் மலர் முகம் தான்

என்னைக் கண்டதும்
உன் மலர் முகத்தில்
புன்னகைப் புஷ்பங்கள்
இதழ் விரிக்கும்
என்று நம்பி

ஓடோடி வந்த என்னை
என் நீ ஏமாற்றுகிறுய்!

மலர்கின்ற மலர்
நீரின்றி வாடிவிடுகிறது

காணுகின்ற என் கண்கள்
உன முகம் பாராமல்
வாடிவிடுகிறது.

இனியவளே!
என
இதயம் நிறைந்தவளே!

உன் இதயத்தை
கேட்குமளவிற்கு நான்
இரக்கமற்றவனல்ல
அதில்,
இடம் தானே கேட்கிறேன்.

"மலருக்கு மலர்தாவி
தேனுண்ணும் வண்டல்ல",
நான்

உன் நினைவுகள்
என இதயத்தில்
பெருக்கெடுத்தோடுகின்ற
வற்ருத ஜீவநதி!
உன்

நினைவெனும் சுமைகளை
தாஙகிக் கொண்டு
போதையெனும்
நிம்மதியின் நிழலைத்
தேடிக் கொண்டிருபபவன்
நான்

சுகம் காண அல்ல,
சுமைகளை இறக்கி வைப்பதற்காக!
காலமெல்லாம்
உன நினைவு ஓவியங்களை
விழிக்குளத்தில் வரைகினற . . .

அன்பன்

Scanned by TapScanner

# வாழ்க்கை

கா. பா. சங்கர குமார குருபரன் II பி. காம

வாழ்க்கை :- இது கனவு என்று பேசுகிறது வேதாந்தம்,
ஜோதி என்கிறான் ஞானி,
கோட்டை என்கிறான் வீரன்,
ஏணி என்கிறான் முற்போக்குவாதி,
தமாஷ் என்கிறான் ரசிகன்,
இறுதி நாடகம் என்கிறான் இறக்கப் போகிறவன்,
இன்பம் என்கிறாள் புதுமைப் பெண்!
சோகம் என்கிறான் வறுமையின் பிரதிநிதி,
புரட்சி என்கிறான் பொது உடமைவாதி,
இறைவனுக்கு அர்ப்பிக்க வேண்டி பொருள்
என்கிறான் பரம பக்தன்
இதில் உண்மை எது?

அமரத்துவம் :
ஆசையின் அர்த்தமற்ற கனவு

காமம் : வெறியேறிப் போன இரண்டு
உள்ளங்களின் பிரதிபலிப்பு

அடக்கம் :
வாழ்க்கையில் ஊறிவிட்ட ஒரு பழக்கம்

ஆசை :
உரிக்க உரிக்க வந்து கொண்டிருக்கும்
வெங்காயத் தோல்
இவை சரிதானே! . . . . .

Scanned by TapScanner

நிலவு : "வானத்தில் கோலமிட
புள்ளிகள் இட்டு
முடிக்கத்தெரியாத பெண்"

முடிவு : மின்னல் கொடியவளை
அணைத்தவையே கரியாஇின
ஐயகோ . . . மரங்கள் . . ."

பூண்டு : "வெள்ளைச் சேலையுடுத்தி
விதவையாக காட்சி தரும் பெண்"

வாழை : "தன்னிடம் இருப்பதைக் கொடுத்து
தன்னையும் கொடுத்து
அழிந்து போகும் தியாகி!"

வாழ்வு : "தான் என்ற அகந்தை கொண்டவன் - இத்
தரணியில் வாழமாட்டான்"

"உன்னையே நீ திருத்திக்கொள் - அடுத்தவன்
அவனுகவே திருந்திவிடுவான்"

"நீ யாரையும் புறத்தை நேசிக்காதே
அகத்தையே நேசிப்பாயாக."

*
**

# அன்பு

**ம. கந்தசாமி**
இளம் வணிகவியல் மூன்றாம் ஆண்டு

'' தாயின் இருதயத்துக்குள்ளிருக்கும் ஆழ்ந்த அழிவற்ற பலமான அன்பினைக் காண இவ்வுலகில் வேறெங்கும் இல்லை.''

- மிஸஸ் ஹொமெர்கஸ்

''அன்பெனும் மலரை அரும்ப விடாதே; அரும்பியபின் கிள்ளி விடாதே.''

''அனைத்தும் அன்பிற்காக இல்லாதிருந்தால் உலகம் இந்நேரம் அழிந்திருக்கும்''

- Gridon

''அன்புடன் விடுக்கப்படும் அழைப்பை அடக்கத்துடன் ஏற்றுக்கொள்.''

''அன்பெனும் மொழியை குருடர்கள் படிக்கலாம், செவிடர்கள் கேட்கலாம் ஊமைகள் பேசலாம்.''

- Proverb (Western)

''உண்மை அன்பினால் உலகத்தையே நாம் வெற்றி கொள்ள முடியும்.''

- Gandhiji

''பீரங்கிக் குண்டுகளின் முன் அசையாதிருக்கும் மனிதன், அன்புகனிந்த சொற்களின் முன் பின்னடைகிறான்.''

- Kandeghar

''அன்பின் நாக்கு நான்கு கண்களில் இருக்கிறது''

- Plitchar

''அன்பின் காரணமாக அரியகாரியங்கள் செயலாற்றப்படுகின்றன.''

- Rajaji

''நெஞ்சில் அன்பு இல்லாத போது வாழ்வு வறண்ட பாலைவனத்தில் நிற்கும் உயிரற்ற மரம் போல இருக்கும்.''

''அன்பினால் உன்மீது நம்பிக்கை வைத்தவர்கள் மீது எண்ணத்தால்கூட ஏமாற்றாதே.''

''தன்னையே அன்புக்கு அர்ப்பணித்தல் கொடைகளில் எல்லாம் பெருங் கொடையாகும்.''

''மனிதமாண்பு அன்பைப்பகிர்வதிலேயே உள்ளது.''

'தவமும் செபமும் பயனற்றது; உண்மை அன்பே சிறந்தது''

''வியப்பு புகழும்; அன்பு அமைதியாய் மகிழும்.''

Scanned by TapScanner

## இலஞ்சத்தின் வேடங்கள்

M. KANDASAMY
Final B. Com.,

முதல்வர் கேட்பார் மூன்றென்று
முன்னூறு செய்திகளதி லடங்கும்
முதன்மை மதிப்பெண் பெற்றாலும்
மூன்றுடன் மூன்று வட்டம் சேர்த்து
முழுசாய் உடனே வேண்டுமென்பார்
முதலிடம் தந்தேன் அவனுக்கென்பார்
கோவில் அர்ச்சகர் கேட்பார் பணத்தை
குரு தட்சணை என்றே கூறிடுவார்
கடவுள் நம்மைக் காததருள
கணக்காய் இடனும் உண்டியலில்
வாழ மணமகன் கேட்பான் பணத்தை
வரதட்சணை என்றே கூறிவிடுவான்
இவர்கள்தான் இப்படியுள்ளார் என்றால்
இரக்கம் இல்லையா மேகமேயுனக்கு
இரசாயனப் பொடி லஞ்சம் கேட்கின்றாயே
ஏழை எம்மிடம் பணமில்லை
இரங்கி உதவி செய்யாயோ?

## கருணை கொள்ளாயோ . . .?

அரசன் - சூரியன்
காதலி - நிலவு
வீரர்கள் - நட்சத்திரம்

கொடுங்கோல் புரியும் அரசே - உன்
கொடுமைக்கு அளவும் இல்லையோ?
வீதியில் செல்லும் அனைவரையும் - உன்
வீண்கணலால் அழிக்கின்றாய் ஆனால்
கருணை உண்டு ஒருத்திக்கு - உன்
காதலி தான் அவள்
குதூகலம் பிறக்கும் எங்களுக்கு - உன்
காதலி தரும் குழுமையினால்
அவளைப் பிடிக்க முடியாவிட்டால்
அனைவரையும் சொல்வது பாவமன்றோ?
எண்ணற்ற படை வீரர்கள் கொண்டு
என்றும் இருளில் வருகின்றாள்
நீயோ, பகலில் மட்டும் வருவதானால்
நிச்சயம் பிடிக்க முடியாதவளை
எட்டாப் பழத்துக்கு கொட்டாவிவிட்டு
ஏமாந்துதான் நீ போகாதே
என்றும் அவளை நினைக்காமல்
எங்களுக்கு நன்மை செய்துவிடு
எரிக்காமல் எங்களை விட்டுவிடு.

Scanned by TapScanner

# ஏக்கவிழிகளின் தாகம்

எம். செல்வக்குமார்
II B.A.

ஓரம்பார்க் கிறவளாய் நீ
ஒதுக்கிவிட்ட முடியெல்லாம்

கோரம்பார்க் கிறதென்ன
கொழுமலரின் இனியவளே!

நினைவுக்குள் மறைந்து நின்று
நிஜமான படகேறி

நனவுக்குள் நடக்கின்ற
நயமான குமரியோ நீ

ஒய்யாரப் புது விழியால்
ஒதுங்கி வழித் தடமாறி

பொய்யான பயணத்தை
பொறித்து விட்டு நடப்பதென்ன?

கலைந்துகிட வெனக் கூறும்
கருணையின் நியாயத்தால்

தொலைந்துவிடு எனக் கூறும்
தொடர் கதையும் நிஜமில்லை

தூக்கத்தில் விழியில்லை
துணிந்து விட்டு இடுகாட்டை

ஏக்கத்தில் விழிக்கின்ற தேன்?
ஏக்கத்தின நாயகியே!

Scanned by TapScanner

# நாளை நமக்காக

எம். பிச்சைமாரி
முதுகலை இரண்டாம் ஆண்டு

ஓ.......
ஆளப்பிறந்த
மன்னர்களே !

பட்டங்கள்
பெற்று விட்டோம்
இனி
படி கட்டுகளை
சந்திப்பது தான்
நம் திட்டங்களா !

இருண்ட
சமுதாயத்திற்கு
ஒளி விளக்குகள்
நாம்
இருட்டறையில்
இருப்பதா !

உறசிய ஒரு
தீக்குச்சி
உலகை எரித்திடுமே
நம் உள்ளத்தில்
எத்தனை புரட்சி
எண்ணங்கள்

தேய்ந்த செருப்புகளாய்
கல்வியே லட்சியமென
பட்டமும் பெற்று விட்டோம் !
நாளை யாருக்கு ?

ஆனந்த வெள்ளத்தில்
அழகு இளமை (காலம்)
விடைபெறுகிறது,
அடுத்து நாம்
சந்திக்கப் போவது
துயர்மிகு கடலின்
சோக வரலாறு

பரவாயில்லை
போனது போகட்டும்
விடியும் பொழுது
நல்லதாக பிறக்கட்டும்
லட்சியமே உயிரென
கருதி விழித்தெழுந்துவா
"நாளை நமக்காக"
பிறக்கிறது ! ! !

Scanned by TapScanner

# காலமெல்லாம் அவளுக்காக (சிறு கதை)

பொ. இராஜ்
பி. ஏ. முதலாமாண்டு

இருள் மெதுவாக மறைய கதிரவன் எட்டிப் பார்த்த வண்ணமிருந்தான. மணி ஆறரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

தூக்கத்திலிருந்த செல்வத்திற்கு சற்று விழிப்புத் தட்டியது. கடிகாரத்தை நோக்கினான், மணி ஆறு நாற்பது ஆ..... என்ற சப்தத்துடன கைகளை நீட்டியபடி இன்னைக்கு காலேசாச்சே இவ்வளவு நேரம வரை தூங்கிட்டோமே என்ற எண்ணம் தோன்ற விரைவாக கல்லூரிகசு தயாரானான்.

செல்வத்தின அம்மா டிபன்பாக்சை கையில் கொடுக்கும்போது மணி ஏழு ஐம்பதையும் தாண்டிக் கொண்டிருந்தது. விரைவாக பேருந்து நிலையம் நோககி நடக்கலானான். வழக்கமாக எட்டு மணிக்கு வரும பேருந்து அன்று பதினைந்து நிமிடம் முன்பாகவே சென்றுவிட்டதாக பககத்தில் நின்ற இருவர் பேசிக்கொண்டது செல்வததின் காதில முள் குத்தியது போன்று இருந்தது.

சற்று ஏக்கத்துடன் ஜோதி அந்தப் பேருந்துக்கு போயிருப்பாளோ? சுற்றும் முற்றும் பாரததான. அவளைக் காணவில்லை மிகுந்த மனவருத்தத்துடன் அடுதத பேருந்து வரும் வரை எதிர்பார்த்துக் கொண்டு நின்றான்.

அடுதத பேருந்து வழக்கமாக எட்டரை மணிக்கு வரும். இன்று ஒன்பது மணிக்கு வநதது. குசியுடன் பேருநதில் ஏறும் செல்வம் இன்று கோபததோடு ஏறிக்கொண்டான்.

ஜோதி பயிலும் பள்ளிக்கும் கல்லூரிக்கும் இடையே உள்ள தூரம் அரை கிலோ மீட்டர்தான. எனவே மதியம் வந்து பார்த்துவிட்டுச் செல்லலாம் என எண்ணியவாறே பேருந்தைவிட்டு இறங்கி கல்லூரியை அடைந்தான.

அன்று முதல் பாடவேளை தமிழ், தமிழ் பேராசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்து மாணவாகளின் மரியாதையையும் பெற்று அமர்ந்தார். பாடநூலை எடுத்து இன்று பணடைய தமிழரின் அக வாழ்வு பற்றி பார்ப்போம் என்று கூறிய பேராசிரியா .....

மாணவர்களை ஒரு முறை நோட்டம் விட்டு .... இன்று ஒரு கலந்துரையாடல். அவரவர்களின் காதல் அனுபவத்தை சொல்லுங்க. என்னுடைய காதல் அனுபவத்தையும் சொல்றேன்.

பேராசிரியர் இதை சொல்லி முடித்ததும் மாணவர்கள் உற்சாகத்துடன ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

செல்வம் நீ உன்னுடைய காதல் அனுபவத்தை சொல்லு, இல்ல இனிமேத்தான் காதலிககணுமா என்றார் பேராசிரியர், பேராசிரியர் இதைக் கூறியதும மாணவர்கள் அனைவரும் சிரித்தனர்.

சற்று தயக்கத்துடன் எழுந்த செல்வம் சார் பக்கத்து ஸ்கூல்ல பிளஸ்டூ படிக்கும் ஜோதிங்கிற பெண்ண காதலிக்கிறேன். நாங்க ரெண்டு பேருமே

Scanned by TapScanner

உயிருக்கு உயிராய் காதலிக்கிறோம். ஆனா, எங்க காதல் நிறைவேறாது ரொம்ப கஷ்டம் சார்.

உங்க காதலுக்கு தடையா இருக்கிறது யாருப்பா செல்வம் என்று பேராசிரியர் நிதானமாகக் கேட்டார்.

சார் ஜோதியோட அப்பா நம்ம ஊர் ஸ்டேட் பாங்க் மானேஜர். அவங்க ளோட சொந்த ஊர் கோயம்புத்தூர். இப்ப எங்க ஊர்லதான் இருக்காங்க. அவங்க நல்ல வசதிபடச்சவங்க நாங்க ரொம்ப ஏழை குடும்பம் இது எல்லாததுக்கும் மேல நேஷனாலிட்டி ப்ராப்ளம் வேற இப்படி இருக்கிற சூழ்நிலையில் எங்க காதல் எப்படி சார் நிறைவேறும் என்று கூறும் போது செல்வத்தின் கண்களில் கண்ணீர் ததும்பியது.

கவலைப்படதே செல்வம் உங்க காதல் கண்டிப்பா நிறைவேறும். நீங்க ரெண்டு பேரும் உறுதியா இருந்தா போதும் இந்தஉலகமே ஒன்றுசேர்ந்தாலும் பிரிக்க முடியாதுப்பா என்று, அழுத செல்வத்திற்கு ஆறுதலாகப் பேசினார் பேராசிரியர்.

இவ்வாறு ஒவ்வொருவராக தங்களது காதல் அனுபவங்களை எல்லாம் சொன்னார்கள். காலை பாடவேளையும முடிந்தது. செல்வம் அவசர அவசரமாக மதிய சாப்பாட்டை முடித்துவிட்டு சைக்கிளில கல்லூரி வரும்தன் நண்பன் ஆனந்தனுடன் மிதிவண்டியில் மின்னல் வேகத்தில் பறந்தார்கள.

இருவரும் பள்ளியை அடையும்போது மாணவர்கள் வகுப்பறையில் சல சல வென சத்தம் போட்ட வண்ணமிருந்தார்கள். ஜோதியின் வகுப்பறையை நெருங்கினார்கள். செல்வத்தின் ஊரிலிருந்து வந்து படிககும பையன் ஒருவன் எதிரே வந்தான்.

டே.... கோபு இன்னைக்கு ஜோதி வந்திருக்காளாடா? என மிகுந்த ஆவலுடன் வினவினான் செல்வம்.

ஜோதி இன்னைக்கு ஸ்கூலுக்கு வரலண்ணே என்னமோ தெரியல லீவு லெட்டரும் கொடுக்கல பஸ்லையும் வரல, என்று கூறியபடி சென்றான் கோபு.

ஏங்கிய மனதுடன்வந்த செல்வத்திற்கு கிடைத்தது ஏமாற்றமே, கல்லூரியை முடித்துக் கொண்டு விட்டிற்கு வந்த அந்த நிமிடமே உடைகளை மாற்றிக்கொண்டு ஜோதியின் வீட்டை நோக்கி நடந்தான்.

ஜோதியின் வீட்டைக் கண்டதும் இவனது இதயம் நின்றே போய்விட்டது. ஜோதியின் வீட்டுக் கதவில் பெரிய இரும்பு பூட்டு தொங்கியது.

ஊருக்கு போயிருப்பாங்க என சற்று சுதாரித்துக் கொண்ட செல்வம் பககத்து வீட்டில் கேட்டுப் பார்ப்போம் என்று பக்கத்து வீட்டில் அமர்ந்திருந்த ஒரு பெண்ணிடம...

ஏம்மா.... இந்த வீட்ல இருந்தாங்களே மேனேஜர் சார் அவங்க எங்க.....

அவரு சொந்த ஊருக்கே டிரான்ஸ்பர் வாங்கிட்டு குடும்பத்தோட நேத்திக்கி ராத்திரி போயிட்டாங்க இனிமே வரமாட்டாங்க. என்று கூறி முடித்தாள்

செல்வம் தன மனதை கல்லாககிக் கொண்டு வீட்டிற்கு புறப்பட்டான். அவன இதயததில் ஜோதியாக எரிந்த அந்த ஜோதிக்குத் தவிர வேறு எந்த ஜோதிக்கும இடமிலலை.

- முற்றும் -

Scanned by TapScanner

## வரதட்சணையும் மக்கள் தொகையும்

(புதுக் கவிதை)

கு. பெருமாள்
II B. Sc., [கணிதம்]
இராஜூக்கள் கல்லூரி
இராஜபாளையம்.

"ஓங்கி வளருதே மக்கள் தொகை - அதை
ஒடுக்கி வைத்துப் பாரோமோ பாரதத்திலே!"

"சாதி மத பேத மில்லையே
ஏழை பணக் காரனென்ற
பாகுபாடு இல்லையே - கற்றவர்
கல்லாதவர் என்ற ஏற்றத்தாழ்வு இல்லையே.

வாலிபரின் இதயத்தில் ஆனந்த
நடனமாடும் பேரழகி - நான்
கன்னியர்கள் வடிக்கும் கண்ணீர்
வெள்ளத்தில் செழித்து வளரும்

செந் தாமரை மலர் - நான்
சொந்த பந்தம் என்னும்
உறவுகளை அறுத்து எறிந்து
ஆட்சி செய்யும் அரசி - நான்

நிலை இல்லாத உலகில்
நிற்க இடமில்லாமல் இருக்கும்
மக்கள் தொகையை அழிப்பதற்காக
பிறந்த சமூக சீர்திருத்த வாதி

என்னை அழிப்பதற்காக கன்னியர்கள்
தீட்டும் திட்டம் எல்லாம் - என்
இதழ்கள் உதிர்வது போலாகும்.
என்னை ஒழிக்கும் சக்தி

மிகுந்த ஆயுதம் படைத்தவர்களே!
வாலிபச் சிங்கங்களே!"

Scanned by TapScanner

## ''புறப்படுவீர்''

சி. கணபதி
இளங்கலை மூன்றாம் ஆண்டு வணிகவியல்

இந்திய இளைஞனே . . . . !
புரட்சி பூ மலர
என்றும் - நீ
புறப்படத் தயாராகு!

உன்
இதழ் விரிப்பில்
சிதறி விழும்
புரட்சிக் கவி வரிகள்
இந்தக் -
தேசப் புல்லுருவிகளை
வேரறுக்கட்டும்

உன்
புரட்சிக் கனல் பார்வையில்
அயோக்கியர்களின் ஆட்டம்
அஸ்தமிக்கட்டும்!

முண்டாசு கவிஞனின்
முழக்கக் கவிதைகள்
இன்னுமா முத்தமிடவில்லை

விழித்தெழு நீ . . . !
வீரத்திலகங்கள்
மட்டுமே -
உன் -
நெற்றியை அலங்கரிக்கட்டும்
அவன்
பாரதியின்
கவிதை'கள் உண்டு
மயங்கிய
நீ
மது வெனும்
மரணக் கிணற்றில்
விழுந்துவிடாதே!
மனதை திசை மாற
விட்டு விடாதே

இந்திய இளைஞனே . . . !
புரட்சிப் பூ மலர
என்றும் - நீ
புறப்படத் தயாராகு!

புதுமையே போர்வாளாய்
இளமையே கேடயமாய்
உன்
கைகளில் ஏந்தி நின்றால்
அறியாமை அரக்கன்
அழிந்தே போவான்!

உன்
தெளிந்த சிந்தனையால்
இந்திய தாயின்
லஞ்ச விலங்குகள்
தகர்க்கப் படட்டும்! (தூள் தூளாகட்டும்)
அதிகாரத்தின் கரங்கள்
அடக்கப்படட்டும்!

அன்றே
உன் திறமையும்
மதிப்பையும்
பறை சாற்றினன்
பரம ஹம்ஸரின் சீடன்

நமக்கு வேண்டியது
அரசியல் ஆசனமன்று!
நம்
பாரத் தாய்கோர்
நிரந்தர சிம்மாசனம்!

இளைய கரங்கள்
ஓங்கி நின்றால் -
புதிய உலகம்
எளிதாய் புலரும்
இல்லாமை எனும்
இருள் நீங்க
இயலாமை எனும்
பனி அகல -
உழைபபெனும் பகலவன்
உதயமாகட்டும் (வெற்றி பவனி வரட்டும்)

இந்திய இளைஞனே . . . !
புரட்சிப் பூ மலர
என்றும் - நீ
புறப்படத் தயாராகு!

Scanned by TapScanner

# மாறுதல்

S. Baskaran I. B. Sc., (C)
R. Rajus' College, Rajapalayam.

செடியெனும் பள்ளியிலே

மலர்கள் யெனும் வகுப்புகளிலே

வண்டான மாணவர் (வியர்) கள்

கல்வியெனும் தேனருந்தி

அம்மலரிலேயே மயங்கி விடமால் (தூங்கி)

இருப்பதற்கான பொறுப்பு

மலரின் இதழாக இருக்கும் ஆசானுடையது,

திருக்கோவிலில் உள்ளதாம் பற்பல சிலைகள் - அது போல்

கல்விக் கோவில் உள்ளனர் பற்பல ஆசான்கள்

திருக்கோவில் உள்ளதாம் ஓரே ஒரு மூலஸ்தானம் - அது போல்

கல்விக் கோவிலில் உள்ளாராம் ஒரே ஒரு முதல்வர்.

திருக்கோவிலில் உள்ள சிலைகளை

பார்க்க செல்லுதாம் பக்தர் கூட்டம்.

கல்விக் கோவிலில் உள்ள சிலைகளாகிய ஆசான்கள்.

பார்க்க வருவாராம் மாணவர் (வியர்) களாகிய பக்தர்களை

# கடிகாரம்

நான் நிலையாய் நின்றுருக்க

என் கைகள் இரண்டோ (மூன்றோ) சுற்றிக் கொண்டிருக்க

நான் எழுப்பும் ஓசை எங்கும் சென்று கொண்டிருக்க

எனது சக்திகள் 'மைனஸ்' ஆகிக் கொண்டிருக்க

நேரம் ஒடிக் கொண்டிருக்க

என் கைகள் அனைத்தும் செயல் இழந்திருக்க

இந் நிலையில்

என்னை பார்க்க வந்தவரிடம் கேட்பேன்

ஐயா ! எனக்கு 'க்கீ' வேண்டும் என்று.

முறுக்கேற்றி விட்டால் நான் அமைதியாய் இருப்பேனா ?

# கவிஞன்

உள்ளதை உள்ள படியே காட்டும் கண்ணாடியைப் போல்

இவன் — தன்

உள்ளத்தில் உள்ளதை கவிதையாக தீட்டுகிறான்.

காற்றின் அழுத்தத்தால் கடல் அலை எழுவது போல

இவன் — இச்

சமுதாயத்தின் அழுத்தத்தால் தன் கருத்தை வெளியிடுகிறான்.

அந்தோ பரிதாபம் இவன் நிலை - ஆம!

இச் சமுதாயந்தான் என்ன வென்ன என்று

இழிவாக பேசுகிறது அவனை, இருந்தும்

இன்னும் எழுதுவது எப்படியெனில் — அவன்

இதயம் எதையும் தாங்கும்

---

புவியின் தேவியே! உன் நிலத்தில் உள்ள புண்ணியர்கள்

புண்பட்ட மனத்தோடு நின்னை துன்புறுத்தினார்களோ?

ஏன்... அழுது கடல் நீரை உருவாக்குகின்றாய்?

அவர்கள் செய்த பாவத்தால் அழியட்டும் என்றா?

இனியொரு கணமும் அப்படி செய்யோதே; ஏனெனில்

அது உனக்கு தான் சிரமம். எப்படி யெனில்

அதற்குள் மனிதன் வேற்று

கிரகத்திற்கு குடிமகனாகி விடுவான்,

---

தென்றலே! ஏன் தவழ்ந்து வருகின்றாய்? உன்னால்

நாங்கள் பெறும் சிற்றின்பத்தை பார்க்க வா?

இவ்வின்பம் - ஒரு சில விநாடிகளே.

புயலே! ஏன் சீறிக் கொண்டு வருகின்றாய்? - உன்னால்

நாங்கள் பெறும் இன்னலை பார்க்க வா?

இன்னல் - பல மாதங்களே.

Scanned by TapScanner

## உழைப்புக்கு சன்மானம்

பெ. சீனிவாசன்
இளங்கலை வணிகவியல் முதலாம் ஆண்டு

உலகில் பணம் என்ற சாக்கடையில்
உருளுகிறாய் பகட்டாரவாரத்துடன்
உன் குணமோ சாக்கடையின் நாற்றம்
உழவன் உழைப்பு என்ற சேற்றில்
உருளுகிறான் உன்னத வெற்றியுடன் - அவன்
உயர்குணமோ மல்லிகையின் வாசம்
உழவன் சேற்றில் ‘கை’ வைத்த பிறகு தான் - நீ
உன் ‘கை’யை சோற்றில் வைக்க முடியும்
உன் கார் தூங்குவதோ வெயிலற்ற போர்டி கோவில்
உழவன் குழந்தை தூங்குவதோ இலையற்ற மரத்தில்

## மழைக்காலம்

பெ. சீனிவாசன்
இளங்கலை வணிகவியல் முதலாம் ஆண்டு

வட்ட நிலாவை - ஒரு
வான்முகில் உரசிச் சென்றதாம்
வெண்நிலவும் வெட்கத்தால்
வேகமாக மறைந்ததாம்
தன் ஜோடி வரவில்லையென்று
கார்முகில் கண்ணீர் விட்டு அழுததாம்
இவர்களின் காதலுக்கும் சதி - இது
இயற்கை வழங்கிய அநீதி

Scanned by TapScanner

# மாணவனும் சமுதாயமும்

“மாணவர்கள் வருங்காலத்து இந்நாட்டு மன்னர்கள். இன்றைய சமுதாயத்தின் முதுகெலும்பாக கூற வேண்டுமென்றால் அது மாணவர்களைத் தான் கூற வேண்டும். இச் சமுதாயம் அவர்களையே சார்ந்துள்ளது'' என பலவாறு பேசும் ஒருவர் கலையறிவையும், சமுதாயத்தின் தலைமையையும் நன்கு அறிந்திருப்பார், அல்லது அவர் இதை பள்ளி வளாகத்தில் பேசியிருக்க வேண்டும்.

பல்வேறு மாணவச் செல்வங்கள் நிறைந்திருக்கின்ற இடத்தில ஒரு மாணவ செல்வம் மட்டும் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்தால் இப் பொல்லாத சமுதாயம் அவனை ''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்ற வாசகத்தை பயன்படுத்தி சாடுகிறது. இந்தச் சமுதாயம், ஏன்? இந்த உலகமே கலப்படம் தான். இப்படி சமுதாயத்தில கலப்படம் இருக்கும் போது, ஒரு பானையில போடுகின்ற அரிசியில் ஏன் சிறிது கலப்படம் இருக்கக்கூடாது? அந்தக் கலப்பட அரிசி முதலில் பதமானால் நம்மால் செய்ய வேண்டியது என்ன இருக்கிறது?

ஒரு மாணவனிடம் ''நீ சமுதாயத்திற்கு என்ன செய்தாய்? சமுதாயம் உனக்கு என்ன செய்தது? என்ற கேள்விக் கணையை தொடுத்தால், அவன் முதல் வினாவிற்கு விடையாக, ''நான் இச் சமுதாயத்திற்கு இன்னின்ன செய்தேன,'' என்று வரையறுத்துக் கூறி விடலாம் ஆனால் இரண்டாவது வினாவிற்கு அவனால் பதிலுரைப்பது அவ்வளவு சுலபமல்ல. ஏனெனில் இச் சமுதாயம், சமுதாயத்திற்கு உழைத்து பாடுபடுபவர்களை மதியாமல், மிதிக்கின்றது. மிதித்ததோடு மட்டுமல்லாமல் எழுந்திருக்க முடியாமல் அழுத்துகின்றது. அதில் ஒரு சாரார் ''நன்று நன்று'' என்றும் மற்றொரு சாரார் ''அன்று, அன்று'' என்றும் எடுத்துரைக்கின்றனர், மாணவனின் உயர்ந்த உள்ளம் சமுதாயம் தனக்கு என்ன செய்தது என்று எண்ணிப் பார்க்கும் போது அவன் நெஞ்சம் குமுறுகிறது. ஏனெனில் இச்சமுதாயம் அவன் நெஞ்சை புண்படுத்தி விட்டது. ஆகையால் இரண்டாவது கேள்விக்கு விடைகூற அவனுள்ளம் மறுக்கின்றது. நம் சமுதாயத்தை தாழ்த்திய பேசவா? என்று.

மேலும் இச்சமுதாயம், பண்பில் அல்லது பணத்தில் உயர்ந்தோர் செய்த தவறுகளை மறைத்து, எடுத்துக் கூற மறுக்கிறது. இச்சமுதாயத்தில் நிலைத்து நின்ற கொள்கை இதுவரை உண்டா? இல்லை ஏனெனில் நம் சமுதாயம் 'ஆளுக்கொரு நீதி, நாளுக்கொரு சட்டம்''என்ற உயர்ந்த கொள்கையை இலட்சியமாக கொண்டுள்ளது. இந்தக்கொள்கையால் இருள்வளர்ந்து கொண்டே போகிறது. ஆகவே இவ்விருளை போக்க ''மாணவன் நினைத்தால் நடத்திககாட்டுவன என்ற நிலை மாறி'' மாணவர்கள் நினைத்தால் நடத்திக் காட்டுவார்கள். என்ற நிலை உருவாக வேண்டும்.

Scanned by TapScanner

கவிதைகள்
P.A. RAVI SANKAR
I B.Com

**இன்றைய சமுதாயம்**

இன்றைய
மாணவ, மாணக்கியர்கள்
நாளைய உலகை
உருவாக்குபவர்கள்
பொய்யென
நிருபித்து விட்டார்கள்.
விஞ்ஞானத்தில்
முன்னேற வேண்டிய
அவர்கள்
'X' கருவிகளை ஆராயாமல்
Sex-யை ஆராய்கிறார்கள்.
கஞ்சத்தனமாக இருந்து
பொருளாதாரத்தை
பாதுகாக்க வேண்டிய
அவர்கள்
கஞ்சாவை அடித்து
காசை வீணாக்குகிறார்கள்.
அன்றைய
வரவு - செலவுக்
கணக்கை
தயாரிக்க வேண்டிய
அவர்கள்
மக்கள் தொகையின்
எண்ணிக்கையை
அதிகரித்து
கணக்கை காட்டுகிறார்கள்
வாழ்வை
பாதுகாக்க வேண்டிய
அவர்கள்
வாழ்வுடன் விளையாடி
அவர்களையே
அழித்துக் கொள்கிறார்கள்.
நீங்கள் திருந்தினாலே
கவிஞர்களின்
பழைய
கனவுகளை
மெய்ப்பிக்க முடியும்.

**இன்றைய அரசியல்**

இன்றைய
அடிக்கல்
நாட்டுவிழா
நாளை
அரசியல்வாதி
வீட்டின்
ஓர்
படிக்கல்.

**அவர்களோ**

என் இனியவளே!
அன்று உன்
அழகைப் பற்றி
எழுதினேன்
கவிதைகள்! கவிதைகள்
என்றார்கள்
இன்று உன்
பிரிவைப் பற்றி
எழுதுகிறேன்
அவர்களோ
என்னை பைத்தியம்
பைத்தியம் எனகிறார்கள்.

**துரோகி**

நீ - துரோகி
ஆம்!
என்னைப்
பார்வையிலே
கொன்று விட்டு
என் நினைவுகளோடு
இல்லறம்
நடத்துகிறாயே
வஞ்சகி!
நீ உதிர்த்தது
ஒரு புன்னகையைத்தான்
ஆனால்!
நான் இழந்தது
என் தூக்கத்தையே
அல்லவா!

**முள்**

அன்பே!
ரோஜாவை
பறித்து
தலையில் சூடிவிட்டு
அதன் முள்ளை
எடுத்து என்
நெஞ்சில் வைக்கிறாயே
அது ஏன்?

**சிரிப்பா?**

இதய மலரே
அன்பை நான்
அஞ்சாமல் அஞ்சலில்
அனுப்பிவிட்டேன்
நாளை நீ
வீசப்போவது
சிரிப்பையா?
வெறுப்பையா?

Scanned by TapScanner

# கண்ணீர் மழையின் கடைசித் துளிகள்

க. முருகேசன் பி.எஸ்.ஸி;
மூன்றாம் ஆண்டு (கணிதம்)

சென்ற நாள் ஏதும்
திரும்ப வராது

சென்ற நாள் அத்தனையும்
சிந்தை வான்வெளியில்

கனவு மேகமெனக்
கவிமழை பொழியுதம்மா

நினைவுகள் ஊர்வலமாய்
நெஞ்சகத்தே போகுதம்மா

நாம் பழகிய காவிய நாட்கள்
நினைக்க கண்ணீரே பெருகும்

காவிய வாழ்வையின்று
கண்ணீரே கரைத்ததம்மா

பார்த்தோம் பழகினோம்
பாதிவழிப் பயணமாகுதம்மா

சேர்ந்தோம் சிரித்தோம்
பாடங்கள் கற்றோம்
திசை மாறிப் பிரிகின்றோம்

பழமை நினைவு பாசங்கள்
திண்மமாக வளரும் நினைவுகள்

வாய்விட்டழுகின்றன
வானில் பறக்கும் வானம்பாடியாய்

இருந்தால் வாழ்க்கையில் பிரிவு இல்லை
மண்ணிலே பிறந்துவிட்டவர்கள் நாம்

மற்றவர்களுக்காக ஏற்படுத்திக் கொள்ள
வேண்டிய ம(ர)ண தண்டனை

கண்ணொளி நிழலில் உறவுகளை
உள்ளத்தில் ஏற்படுத்தி

உண்மை அன்புடனே பழகி வந்தோம்
இப்பிரிவு என் உள்ளத்தை

கூர்முனை கத்தியால் பிரிப்பதுபோல்
இருக்கின்றது இருந்தும் மனதை
கல்லாக்கிக்கொள்வேன்.

சின்னச் சின்ன ஆசைகளை
சேர்த்து வைத்திருந்தேன் - அது

சிதறிப் போய்விடும் என்றறிந்திருந்தால்
பூட்டி வைத்திருப்பேன்

வண்ண வண்ண நினைவுகளை
நெஞ்சத்தில் வளர்த்திருந்தேன்

வண்ணம் மங்கிப் போய்விடும்
என்றறிந்திருந்தால் வரையாமல்
இருந்திருப்பேன் நான்

இக் கல்லூரி வாழ்க்கையில்
இழந்த நாட்களைப் பெறுவது

இயலும் காரியமா? - ஆம்
சென்ற நாள் ஏதும்

திரும்ப வராது
சென்ற அத்தனையும்

சிந்தை வான்வெளியில்
கனவு மேகமெனக

கவிமழை பொழியுதம்மா
நினைவுகள் ஊர்வலமாய்

நெஞ்சகத்தே போகுதம்மா.

Scanned by TapScanner

தமிழ்நாடு பதிப்பகம் வெளியீடான

## "தேனின் மருத்துவ குணங்கள்"

P. R. CHANDRAN,
I. B. Com.,

ஒரு கோப்பைத் தண்ணீரில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து காலை வேளைகளில் பருகி வந்தால், இரவில் அமைதியான தூக்கம் வரும். இதை நாள் தோறும் பருகி வரவேண்டும்.

மீன் எண்ணெயோடு தேனைக் கலந்து உண்டு வந்தால் ஆறாத புண்கள் ஆறிவிடும்.

இனிப்புப் பலகாரங்கள் உலர்ந்து கெட்டுப் போகாமல் இருக்க அதன் மீது சிறிது தேன் பூசி வைககலாம்.

தேனுடன் சுண்ணாம்பைக் கூட்டி நன்றாகக் குழைத்துப் பழுக்காத கட்டிகள் மேல் பூச கட்டிகள் பழுக்கும்.

வயிற்றுவலி ஏற்பட்டவர்களுக்கு தொப்புழைச் சுற்றிலும் தேன் தடவினால் வலி நீங்கும்.

எண்ணெய்ப் பசையுள்ள அழுக்குக் கைகளைச் சுத்தமாக்க வேண்டுமானால் தேனைத் தடவிப் பின் கழுவி விட வேண்டும்.

தாய்மார்களின் முலைக்காம்பின் இரணத்திற்கும், பால் கட்டிக்கும், தேனைப் பூசிக் குணமாக்கலாம்.

எலுமிச்சம் பழ ரசத்துடன் தேன் கலந்து பருகினால் நீர்க்கோவை நீங்கும்.

அபினியை அதிகமாக உட்கொண்டு நஞ்சேறியவர்களுக்குத் தேனை குடிக்கச் செய்து வாந்தி எடுக்கச் செய்தால் நஞ்சு விலகும்.

சீரகத்தை எடுத்து நீர் சேர்த்துச் சுண்டக்காய்ச்சிக் கஷாயமாக்கி அதில் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் வெறிநாய்க்கடியின் விஷம் போகும். பிற விஷக் கடிகளுக்கும் இம் மாதிரிச் செய்யலாம்.

வசம்பை இலேசாக வறுத்து, கல்லுரலில் இடித்துச் சூரணமாக்கிக் கொஞ்சம் தேனில் குழைத்துக் கொடுக்க பாம்பு விஷம் குறையும்.

மயில் இறகின் சுட்ட சாம்பலுடன் தேன் கலந்து கொடுத்தால் பேதியாவது நிற்கும். இது மிகவும் அனுபவபூர்வமான மருந்து. மயிலிறகின் வெள்ளை நிறத் தண்டை மட்டுமே சிலர் சுட்டு எடுத்துக் கொள்வார்கள்.

தேன் கலந்த பஞ்சாமிர்தம் உண்டு வந்தால் சத்துணவிலுள்ள ஊட்டம் பெற முடியும்.

மூன்று கிரெயின் படிகாரத்தூளை எடுத்துத் தேனுடன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் இருமல் போகும்.

இருதய நோய் உள்ளவர்கள் மாதுளம் பழத்துடன் தேன் கலந்து சாப்பிட விரைவில் குணம் அடைவர். இனிப்பு மாதுளைதான் நல்லது புளிப்பு மாதுளையைப் பயன் படுத்தக்கூடாது.

Scanned by TapScanner

# நேர்முக தேர்வுக்கான சில குறிப்புகள்

P. R. CHANDRAN
I B. Com.,

நீங்கள் நேர்முகப் பேட்டிக்குச் செல்கிறீர்களா? இதோ உங்களுக்குப் பயன தரும் குறிப்புகள் சில:

நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் போது புத்தம் புதிய உடைகளை முதல முறையாக அணிந்து செல்ல வேண்டாம் உடைகளும் காலணியும் ஏற்கனவே ஓரிரு முறையாவது நீங்கள பழக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அப்போது தான் உங்களுடைய முழுக் கவனமும் பதில் அளிப்பதிலேயே இருக்கும்.

அறையினுள் நுழைந்தவுடன் அனைவருக்கும் வணக்கம் செலுத்தவேண்டும். தேர்வுக் குழுவில் பெண் உறுப்பினர் எவரேனும் இருந்தால் அவருக்கு முதலில் வணககம் கூறுங்கள்.

உங்களை வரவேற்று அமரச் சொன்னதும் வணக்கம் கூறிவிட்டு அமரவும் அமரச் சொல்வதற்கு முன் நீங்களாக அமர வேண்டாம்.

கேள்விகளுக்கு சாதாரண குரலில் அழுத்தமாகவும் அதேசமயம் தெளிவாக வும் பதில் கூறுங்கள். வார்த்தைகளை விழுங்காதீர்கள்! நீங்கள் அவசரமாகப் பதில் கூறினால் உங்களுடைய பதில் அவர்களுக்குப் புரியாமல் போகலாம்.

கேள்விகளுக்குப் பதில் கூறும்போது தயக்கமோ வெட்கமோ கொள்ள வேண்டாம். தன்னமபிககையுடன் பதில் அளியுங்கள். உங்களுடைய பதில்கள் தவறாக இருக்குமோ என்று தயங்கவேண்டாம். சொல்ல விரும்புவதை அவர்களுக குப் புரியும்படி கூறுங்கள்.

சிறிய நல்ல பிரீப்கேஸ் ஒன்றைக் கையில் எடுத்துச் செல்லுங்கள். அழுக்கான கிழிந்த பைகளைத் தவிர்க்கவும் தேவைப்படும சர்டிபிகேட்டுகளை உடனடியாக எடுத்துத் தரக்கூடிய அளவில் அடுக்கி வைத்திருங்கள்.

இருக்கையில் அமரும்போது நன்றாகச் சாய்ந்து அமராமல் சிறிது முன்பக்கமாக உடலை வளைத்து அமரவும் அப்போது தான் நீங்கள் ஆர்வம காட்டுவதை தெரிவிக்க முடியும். அதற்காக இருக்கையின் ஓர விளிம்பில் அமர வேண்டாம்.

சம்பளம் எவ்வளவு, ஓவர்டைம் உண்டா, அலவன்ஸ்கள் எவ்வளவு என்று ஒரு போதும் நீங்களாக முதலில் கேட்காதீர்கள் அவர்கள் உங்களைத் தேர்ந்தெடுத்து விட்டதாகக் கூறிய பிறகு வேண்டுமானால் அவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

எப்போதும் பொறுமையையும் நிதானத்தையும் கை விடாதீர்கள்! உங்களுக்கு எரிச்சலூட்டக் கூடிய கேள்விகளைக் கேட்டாலும் கோபப்படாமல் பதில் சொல்லுங்கள். ஏற்கனவே கேட்ட கேள்விகளை மீண்டும் கேட்டாலும் பதில் சொல்லுங்கள். அதுதான் முதலிலேயே சொன்னேனே என்று சொல்லாதீர்கள.

உடைகளை அணியும் போது கூடிய மட்டும் கோடு போடாத வெள்ளை உடைகளையே அணியுங்கள். தைரியமாக அமருங்கள் பயத்தை வெளிககாட்ட வேண்டாம்!

“வெற்றி நிச்சயம் உங்களுககுத்தான்”!

*Scanned by TapScanner*

# சமுதாய வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு

ஜே. தர்மராஜ், எம். ஏ; [வரலாறு]
எம். ஏ; பொருளாதாரம்

இளைஞர்கள் சக்தியின் உறைவிடங்கள், இளமையில் வேகமும் வலிமையின் துடிப்பும் நிறைந்த அவர்களிடமே இந்த சமுதாயத்தின் சக்தி அடங்கிக் கிடக்கிறது. எனவே, சரியான வழியில் செயல்பட வேண்டிய பொறுப்பு இளைஞர்கட்கு உள்ளது. அவர்களைச் சரியான வழியில் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மூத்தோர்க்கு உள்ளது. திடமான எண்ண வலுவுடைய நூறு இளைஞர்களைத் தாருங்கள் ; இந்த நாட்டையே மாற்றிக்காட்டுகிறேன் என்றார் விவேகானந்தா, களித்திருக்க மட்டுமல்ல இளைமைக்காலம் பல கடமைகளைச் செய்து முடிக்கவும் தான் இக்காலம்,

இளைஞர்களிடையே காணப்படும் உற்சாகமும் ஏற்றமிகு எழுச்சியுமே புதிய சமுதாயத்தைச் சமைக்கும் வலுவினைக் கொண்டு உள்ளது. சமுதாய வளர்ச்சியும் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்களும் இளைஞர்களின் மனநிலையில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. எனவே, இளைஞர்களின் மனம், திறன், முயற்சி. உற்றுநோக்கும் உணர்வு ஆகியவற்றில் புதிய எழுச்சி ஏற்படவேண்டும். அந்த எழுச்சியே சமுதாய வளர்ச்சியின் அடிப்படை.

ஆடவர் பெண்டிர் இளைஞர்கள் குழந்தைகள் முதியவர்கள் அனைவரும் சேர்ந்ததே சமுதாயம். அனைத்து நிலையிலும் அவர்களின் உயர்வே சமுதாயத்தின் உயர்வு. அந்த உயர்வுக்குச் சமுதாயத்தின் முதுகெலும்பான இளைஞர்களின் உழைப்பே உறுதுணை மனித நாகரீகத்தின் மீது படிந்த அழுக்குகளையெல்லாம் அவ்வப்போது சலவை செய்து புதிய சகாப்தம் அமைத்தது இந்த இளைஞர்கள் தாம். பெரும்புயல், பெருவெள்ளம் பேரழிவு ஏற்பட்டபோதெல்லாம் வீறுகொண்டெழுந்து' வினைமுடிக்க செயல்படுவது இந்த இளைஞர்கள் தாம். இளைஞர்களே இதுவே நும்காலம். புறப்படுங்கள். நம் நாட்டிற்கு, சமுதாயத்திற்கு ஏற்றமிகு செயல்களை படைத்திடுங்கள். புதிய சமுதாயத்தை உருவாக்கிடுங்கள்.

இளைய நெஞ்சங்களிலெல்லாம் உலக சிந்தனைகள் உலா வரும் இந்நாளில் சமுதாயத்தின் பல பிரச்சனைகள் கேள்விக்குறிகளாகத் தேங்கி நிற்கின்றன. பிரச்சனைகளில் தீர்வே சமுதாயத்தின் உயர்வு.

Scanned by TapScanner

முதலாவதாக நமது நாடு: ஆம் நாடு என்ற முழகத்தின் உணர்ச்சிப் பிரவாகம் இளைஞர்களின் ரத்த நாளங்களில் கலக்கவேண்டும். இள இந்தியா எழுந்து விட்டது, வள இந்தியா உரித்து விட்டது. மாநில எல்லைகளைக் கடந்து மதச் சுவாகளைத் தாண்டி காஷ்மீர் மலைச் சாரலில் உலவுகின்ற தோழனைச் சகோதரனாகப் பாவிக்கும் உணர்வை வளர்க்கவேண்டும். இளைஞனே இந்த சமுதாயத்தின் எழுச்சிக்கும் ஏற்றமிகு வளர்ச்சிக்கும் தேசீய என்னும் அவசியமே.

அடுத்து, சமுதாய வளர்ச்சிக்குத் தேவை சமுதாய அமைதியே. சமுதாய அமைதியை ஏற்படுத்த இளைஞர்கள் போர்க்கோலம் பூண்டு செயல்பட வேண்டும். இந்த சமுதாயததில் அமைதியை இழப்பதற்கு ஆயிரம் வாய்ப்புகள். வீட்டில, வீதியில், சாதியில் சமயத்தில் அமைதி என்னும் புள்ளிமானை வேட்டையாட வெறி நாய்கள் தாவித் திரிகின்றன. சாதிப் பிரிவுகளால் சமுதாய அமைதி பாதிக்கப்படுகிறது. சாதிகள் இல்லையடி பாப்பா என்ற கற்றை மெய்யாக்கும் சமுதாயம உருவாகப்பட வேண்டும். இதற்காக இளைஞர்கள் சாதி, மதம், இனம கடந்த உணர்வைத் தங்களிடம் வளர்த்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

சமுதாய வளர்ச்சியில் பாதையில் முட்டுக்கட்டைகள் பல பரவிக்கிடக்கின்றன. அவைகள் இந்த சமுதாயத்தின் சாபககேடுகளே. முதலில் மூட நம்பிகைகள். ஆம் இந்த நாட்டில் மூட நம்பிக்கைகள் ஆழமாகவே வேரூன்றிக் கிடககின்றன அவை சமுதாய வளர்ச்சிக்கு பெரும் தடைக் கற்களாக உள்ளன. பாரம்பரியமாக வரும் பழங்கால நம்பிக்கைகள் மக்களின கரங்களைக் கட்டுப் போட்டுள்ளன, செயலாக்கத்தைச் செயலற்றதாக்குகின்றன, முன் செல்லும் தன்மையினை பின்னிழுககின்றன. பழமை பாராட்டும் இந்த சமுதாயத்தின் கட்டுக்களை அவிழ்த்துச் செயல்படும் பொறுப்பு இளைஞர்கட்கு உள்ளது, இளைஞர்களே, மூட நம்பிக்கை என்னும் முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெரியுங்கள்.

அடுத்து, சமுதாய வளர்ச்சியின் பெரிய முட்டுக்கட்டையாக விளங்குவது வரதட்சனைக் கொடுமையே. இதனைப்பற்றி பாடாத கவிஞர்கள் இல்லை, எழுதாத எழுத்தாளர்கள் இல்லை. எனினும் தொடர்கின்றன கொடுமைகள். இன்னறயச் சமுதாயத்தில் மனம்வேண்டும் பெண்ணுக்கு வரன்தேடும பெற்றோர்கள் அமைதி இழககிறார்கள். அதனை மாற்றிட இளைஞர்களாலேயே முடியும். இளைஞர்களே வரதட்சனையின்றி மனம்முடிப்போம் எனசூளுரையுங்கள். இலட்சியமில்லாத இயந்திர வாழ்க்கையை விட்டு விட்டுக்கொள்கை மிகுந்த எழிலான வாழ்க்கையுடன கைகோர்த்துக் கொள்ளுங்கள் செயல்திறன மிக்க இளைஞர்க்கு என்றும் ஜெயமேபதில்.

சுயநலம் சமுதாய வளர்ச்சியில் பிரியதொரு தடை. தன்வலம் பேணா பொதுநல வாதிகளாக இளைஞர்கள் இயங்கிட வேண்டும். தன் பெணடு, தன் பிள்ளை, சம்பாத்தியம இவை தான் சதம் எனறிருக்கிற சுயநலப்போக்கை விட்டு, தன்னூரா, தன்நாடு தன்னுலகம் என்ற மன விரிவை வளர்த்து உலக வாஞ்சையுடன் செயல்படுதல் அவசியம்.

சமுதாய வளர்ச்சியில் தடைகளை அகற்றினால் மட்டுமே இளை, முன்னேற்றத்தின் ஏணி. இளை மேன்மை, இளைஞர்களின் கடமை உணர்வு. நிலையற்ற இளமைக் காலத்து என்னும் வளமை கிடைத்தற்கரிய பெறும் பேறு, நிலைத்திடல் அவசியம், புகழ்ந்து நிலைத்த புகழுக்குரிய நற்செயல் புரிந்திட வேண்டும்" என்பது வள்ளுவர் வாக்கு. இளைஞர்களே வருங்கால போற்றிச் செயல்வேண்டும்" என்பது வள்ளுவர் வாக்கு. இளைஞர்களே வருங்கால இந்தியாவை உருவாக்கும் இணையற்ற சிற்பிகள். இந்த தலைவர்கள் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் இணையற்ற சிற்பிகள். இரு நமக்கு சாகுவதுமல்ல. இங்கும் ஓர் இனிய நாட்டை உருவாக்க முடியும் என நம்பிக்கையுடன் உழைக்க வேண்டும்

பணியில் பெறும் பகட்டுப் பார்க்கும் பழக்கம் போக்கி உழைப்பை நம் முயன்றால் நம்நாடு மேம்பாடு அடையும். செய்யும் தொழிலே தெய்வம் இதனை மதிக்கும் மனநலம் தேவை. சமுதாயம் என்ன செய்தது நமக்கு எனறெண்ணி சோ வுறும் நிலைமாற்றி, நாம் என்ன செய்தோம் அதற்கு என வினவி விடை காண முயலவேண்டும். அதற்குத் தேவை நம்பிக்கை. இளைஞர்களின் மூன்றாவது நம்பிக் கையிருத்தல் வேண்டும். நம்மால் முடியும் நல்லது செய்ய' என்ற நம்பிக்கை வளமாக வாழ்வை தொடங்கி தொடர்ந்திட உதவும். முயன்றால் முடியாதது ஒன்று மில்லை. நம்பிக்கையே வாழ்க்கையில் வரும் இடையூறுகளில் இடும்பொழுதும் சரியாக ஆயுதம். எனவே, நான் நம்பிக்கையுடன் மடுத்த வாயெல்லாம் பகடு போன்று துடுக்குடன் செயல்பட வேண்டும். தேனீக்களையும், எறும்புகளையும் போல சுறுசுறுப்பாக இயங்கி கடமையாற்றுங்கள்.

இன்றைய சமுதாயத்தில் இளைஞர்களைக் கவர்ந்திழுப்பது அரசியலே அவர்கள் சிந்தனைக்கு தடைபோடுவதும் அதுவே. ஆர்ப்பரிக்கும் கும்பல், அடிதடிக் கூட்டம். பார்த்திருக்கும் நேரத்தில் கொள்ளை நடத்தும் பக்குவம் அறிந்தவர்கள் இவர்களே இன்றைய சமுதாயத்தின் மலர்கின்ற அரசியல் தலைமுறைகள். வீட்டிற் கோர் கட்சியும் உண்டு. வீட்டிற்கோர் கொடியும் உண்டு. அரசியல் சில்லறைகள் எழுப்பும் ஓசையில் சமுதாய அமைதி தினம் சாகிறது. அரசியல் பண்பாடு அமிழ்த் மித்துக் கொண்டிருக்கிறது, அரசியல் சமுதாய வளர்ச்சிக்காகவே இயங்கவேண்டும் இப்பொறுப்பினை உணர்ந்து இளைஞர்கள் செயல்படவேண்டும். லஞ்ச, லாவண்ய கையூட்டு, கள்ளச்சந்தை, கறுப்புபணம், இவைகளை வதைசெய்து அழிக்க வேண்டிய அவதாரமூர்த்திகள் இளைஞர்களே.

இளைஞர்களே இன்னும் கேளுங்கள். பெண்கள் சமுதாயத்தின் கண்கள் எந்த ஒரு சமுதாயத்தில் பெண்ணுரிமை மதிக்கப்படுகிறதோ அதுவே வளர்ச்சி அடைந்த சமுதாயம், எனக் கொள்ளப்படும், ஆம் பெண்ணுரிமை போற்றுதல் அவசியம். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்பது அந்தக் காலம். அகில லகம் ஆனந்தத்தை சூடிக்கொள்ளும் அளவிற்கு பெண்மையின் சமீபகால சாதனை கள சகாப்தங்களாகிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு துறைகளிலும் பெண்கள் ஆனாலும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி அன்றாடம் நிகழ்கிறது. தன் மடமையை மண்ணாக்கும் பலி இளைஞர்களிடத்தே தான் உள்ளது. பெண்மையை போற்றுங்கள். அதுவே சிறந்த சமுதாயப்பணி.

Scanned by TapScanner

பாரத நாடு பழம் பெரும் நாடு. நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர் எனவேண்டிக கொணடாா பாரதி. நமது நாடு வளமான பணபாட்டையும், கலாச்சாரததையும் பெற்றுள்ள நாடு. ஈராயிரம ஆண்டுகளுககு முனனரே தமிழனின் பணபாடு கடல கடந்து பரவியது. இனறு மேறகததிய தாககத்தால சில பாதிப்புகள் நிகழ்ந்துள்ளன. இடைக் காலததில் வந்த அந்த மோகம் தடையாக நிறகிறது. எனவே அத்தடையை அகற்றி சிறப்பான நமது பணபாட்டையும் கலாச் சாரததையும கலைகளையும பாதுகாப்பது இளைஞர்களா கடமை. கிராமியக கலைகளுக்கு ஊக்கம அளிக்க வேண்டும். அதன் வளத்தை பாதுகாப்பதும் இளைஞா கடமை. கலைகளின வளர்ச்சியும், பணபாட்டின் வளர்ச்சியுமே சமுதாய வளர்சசியின் சால்புறச் செய்யும்.

கிராமங்களே இந்த நாட்டின் முதுகெலும்பு கிராமங்களில் வளர்ச்சியே சமுதாயததின் வளர்ச்சி, இந்த நாட்டின் வளாச்சி, ஆனால் இன்றோ கிராமங்கள். இளைஞர்களால் புறககனிக்கப்படும் நிலை. காரணம் அரசாங்க வேலைகளையே ஆவலுடன் நோக்கும இளைஞர் சமுதாயம் தகுதிககேற்ற வேலை வேண்டும். என்ற தணியாத ஆவல். இதனாலேயே எண்ணற்ற இளைஞரின் உழைக்கும் திறன உறங்கிக் கொண்டு இருக்கிறது, ஏன் இந்த நிலை? குற்றவாளிக் கூணடிலே நிற்பது பெற்றோர்களும் தான. தனது அந்தஸ்தில் அளவுகோள் தன் மகன் பார்ககும அரசாங்க வேலையே. இது பெற்றோரின் கணிப்பு.

இந்த மன நிலையில் மாறுதல் ஏற்படடட்டும், தாழ்வு மனப்பான்மை வாழ்வுக்கு உதவாது. எந்த தொழிலும் செயது சமுதாயத்தில் சாதிக்க முடியும் எதனையும் பகலவனுக்குக் கீழே உள்ள இந்த பூமியில் எதுவும் சாதிக்க இயலும். பேரறிவை பேதைப் பொருட்கட்கு அடிமை ஆகாதீர், வளரும் சமுதாயத்தில இளைஞர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம். விதைகள் பதரனோல் விளைச்சலும் பூஜயம் தான். எதிர்கால நல்வாழ்வில் வித்துக்களே சோரம் போகாதீர்கள.

இளைஞர்களே வாருங்கள் கிராமங்களுக்கு. தொழிற் துவங்கிட எண்ணற்ற சலுகைகள் உங்களுககு விவசாயம் மூத்தோரின தொழில், முதியவர்களின் தொழில் என்ற எண்ணத்தை விட்டொழியுங்கள். விவசாயத்தில் ஈடுபட்டால் சமுதாய அந்தஸ் தில்லை என்ற சபலம் போககுங்கள், இன்று ஆராய்ச்சியின் விளைவாக விவசாயத தில் விஞ்ஞான முறை புகுத்தப்பட்டுள்ளது. பயிர்த தொழிலில் ஈடுபட்டு அதிக உற்பத்தி ஏற்படுத்திட முடியும். அதிக லாபமும ஈட்ட முடியும், இதனால் நாம் உயர்ந்திடலாம். இந்த சமுதாயம செழிப்படைந்திடும். நாடு வளம் பெறும். அத்துடன் அரசாங்கம் அமுலாக்கி நடத்திவரும் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் ஏராளம தேசிய வங்கிகளும தொழில் முதலீட்டுக் கழகமும் முன்பணம் தருகின்றன. சீரான நீண்டகால கடனுதவி சந்தாப்பங்களை உபயோகபபடுத்துங்கள். பட்டுப்பூச்சி வளர்த்தல, கோழி வளர்ப்பு. கால்நடை உற்பத்தி, அச்சுத் தொழில், கைவினைப் பொருள்கள் உற்பத்தி. இதுபோல பொருளீட்ட பலதுறைகள் உண்டு.

Scanned by TapScanner

அசிகாபாத்தில் இந்த மாதம் 5ம் தேதி பேசிய பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி சிறுதொழில் பிரிவுகளையும் சொந்த வியாபாரத்தையும் துவககுமாறு இளைஞர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். அரசு அமுலாக்கி உள்ள சுயவேலை வாய்ப்புத் திட்டங்களிலிருந்து இளைஞர்கள் அதிகம் பயன் பெறாதது வருத்தமளிக்கிறது, இதனைப்பயன்படுத்திக் கொள்ளாமல் அவர்கள் அரசாங்க வேலைகளுக்காக அலைகிறார்கள் என்றார்''. வேலை வாய்ப்புகள இருக்கும் திசை நோக்கி இளைஞர்கள நகரவேண்டும். தன் ஊரிலேயே வேலை, தன் மாவட்டத்திலேயே வேலை என்ற எண்ணததை உதறிவிட்டு, இந்த நாட்டில் எப்பகுதியிலும் சென்று உழைககும் உணர்வு வரவேண்டும. இளைஞர்களின் உழைப்பால் தொழில் வளம் பெருகும். தொழில் வளமே சமுதாய வளர்ச்சியின அடிப்படை,

சமுதாய, தேசீய சிந்தனைகளை கொண்டிருக்கும் இளைஞர் நெஞ்சஙகள, இனி உலக சிந்தனைகளையும் உரமிட்டு பரப்பவேண்டும். இன்று நிலத்தின மீது உயிர் வாழ்வது பாதுகாப்பாக இல்லை. நீரின் மீதும் பாதுகாப்பு இல்லை. நீள விசும்பும் அப்படியே. அதுமட்டுமா விண் வெளியிலிருந்தும் நமக்கு ஆபத்து தோன்றி உள்ளது, சில நிமிட நேரத்தில் நம்மை பூண்டோடு அழித்து விடக்கூடிய அளவுககு அணு ஆயுதங்கள் குவித்து வைககப்பட்டுள்ளன. இளைஞாகளே அணு ஆயுதங்களை அழிவுக்கு பயன்படுத்தாமல் ஆக்கப்பணிகளுக்கு செயல்படுத்த குரல் கொடுஙகள, அணுப்போரின் பேரழிவு குறித்து உலகத் தலைவர்களின் கவனத்தை கொணடு வரும் பொறுப்பு உங்களிடையே தான் உள்ளது,

ஒளிபடைத்த கண்களையும், திறம்படைத்த தோள்களையும் பெற்றுள்ள இளைய தலைமுறையே, தலைவிதி என்று ஒன்றில்லை. வாழவையும் தாழ்வையும் வகுப்பதும் தொகுப்பதும் நம் எண்ணமும் செயலும் தாம். இப்பூவுலகைக் குறுகிய பிரிவுகளாயப் பிரிக்கின்ற இனம், மதம், ஜாதி, என்னும் சுவர்களில் முட்டி மோதி மண்டையை பிளந்து கொள்ளும் மடமையை அகற்றுவோம். மண்ணில் பிறந்த மாந்தரெல்லாம் வண்ணததால் மாறுபட்டாலும் எண்ணத்தால் ஒன்றானவர் எனும் இலட்சியததை நிலை நாட்டுவோம். விஞ்ஞானத்தைக கௌரவமாகத் தனது தோளில் சுமக்க ஆரம்பித்த மனித நாகரீகம் இன்று அதன் சுமையாலே சாகப் பார்க்கிறது. அழிவுககு முகவுரை எழுதிக்கொண்டிருக்கும் வல்லரசுகளில வக்கிர எண்ணங்களை உலகுக்கு உணர்த்துவோம். இருள் இனி எங்கும் இல்லை என்று சொல்லி புறப்பட்டால் காரிருளும், காட்டாறும், கடும்புயலும் நம் கடமைகளைத் தடுக்க மாடடா.

அமைதிக்கு வழி எது என்று தேடிக் கௌதமன் புறப்பட்டபோது தன்னால் முடியுமா ? என்று ஐயுற்று நின்றிருந்தால் இன்று பௌத்தமதமில்லை. கேடுகெட்ட மாந்தரே (மானிடரே) உங்களுக்காக நாம் சுமக்கிறேன் எனச் சொல்லி சிலுவை சுமந்து ஏசு புறப்பட்ட போது தன்னம்பிககையற்றுத தயங்கி இருந்தால், இன்று கிறிஸ்தவ மதம் இல்லை, என்னால் முடியுமா என்ற கேள்வியை நெப்போலியன் கேட்டிருந்தால் அவன் வாள் முனையாள் பிரான்சின் மணிமுடியைப் பெற்றிருக்க மாட்டான். நம்மால் முடியாதது நானிலத்தில் ஏதும் இல்லை.

Scanned by TapScanner

இளைஞர்களே,

இதமான இனிய தென்றலின் சுகத்தை மட்டும்
அனுபவிக்க நாம் பிறக்கவில்லை,
முத்தோர்கள் ஆக்கி வைத்ததை அமைதியாக அனுபவித்து
திளைக்க நாம் தோன்றவில்லை.

சமுதாயக் கடமைகளின் சுமை நமது தோள்களை அழுத்துகின்றன.
தட்டிக்கழித்தால் தாய்த்திருநாடு தரணியில் உயர்வது எப்போது ?

நீங்கள் இல்லாவிட்டால் யார் செய்யப் போகிறார்கள் ?
இங்கு செய்யாவிட்டால் எங்கு செய்யப் போகிறீர்கள் ?
இப்போதில்லாவிட்டால் எப்போது செய்யப்போகிறீர்கள் ?

தயக்கங்களையும், மயக்கங்களையும், தகர்த்தெறிந்து விட்டு கரங்களை உயர்த்திப் புறப்படுங்கள், பணிகள் பல செய்து இனியதொரு எதிர்காலம் படைப்போம்.

வாழ்க பாரதம் ! வளர்க இளைஞர் தம் பொறுப்புணர்வு !!

---

27 - 4 - 86 அன்று திருநெல்வேலி வானொலி மூலம் ஆற்றிய உரை.

---

குற்றமற்ற, சிறந்த, களங்கமில்லாத நன்னடத்தை யைச் செயலில் காட்டுக ! எல்லாவற்றுக்கும் ஆதாரமாக பூமி இருப்பதைப் போல, எல்லா அறங்களுக்கும் ஆதாரம் நன்னடத்தை தான்.

★
★★

மதச் சடங்குகள், பொய்யான தத்துவம், சந்தேகத்தில் நாட்டம் - இம் மூன்றும் அடிமைத் தளைகள் என்பதனை உணர்வாயாக.

— சித்த நாகார்ச்சுனர்

**With Best Compliments From**

# THE JANAKIRAM MILLS LIMITED.

Post Box No. 4

RAJAPALAYAM - 626 117

Telegram : 'SAKTHI'  Phone : 2115 { PBX Three Lines

Telex : 0442 - 210 JKRM IN

INSTALLED SPINDLEAGE - 34,044

Spinners of Best Quality of Cotton Yarn
Counts Ranging From 14s to 80s in Hank & Cone
Both Single and Doubled Yarn
and Staple Fibre Yarn of 31s and 40s

நல்வாழ்த்துக்கள்

பத்திரங்கள், சர்டிபிகேட்டுகள், வரைபடங்கள், ஸ்டேட்மெண்ட் போன்றவை
ஒரிஜினலை விட நகல் காபி தெளிவான முறையில் எடுத்துக்
கொடுக்கப்படும்

ஜப்பான் 1987-ம் வருட புதிய மாடல் மிஷின்

## கேனன் ஆட்டோமேடிக் கலர் கம்ப்யூட்டர் ஜெராக்ஸ்

போன் : ஆபீஸ் 2162  இடம் :  போன் : வீடு 3261

**ஸ்ரீ வேல்முருகன் பிரஸ்,** 1-A, P. S. K. பார்க், R. C. சர்ச் தெரு
தென்காசி ரோடு, இராஜபாளையம்.

உரிமையாளர் : P. செ. வேலாயுத ராஜா

# இளைஞனே புறப்படு . . .!

அ. ரவிவர்மா
பி. ஏ. இரண்டாம் ஆண்டு

எனது இனிய இளைஞனே !
உன்னைப் புறப்படு என்று
எங்கே அழைக்கிறேன் தெரியுமா ?
சமுதாயச் சந்தையிலே

சாதி
மதம்
அரசியல், இவையனைத்தும்
வியாபாரப் பொருளாக
விற்கப்படுகிறதே - அதனைத்
தட்டிக் கேட்கத்தான்

இளைஞனே !
நாளுக்கு நாள்,
வாழ்க்கை எனும் வானத்திலிருந்து விழும்
இன்னல் இடிகளை இதயத்தில் தாங்கிக்கொண்டு

மரத்துப்போன நெஞ்சங்களோடு
இந்நாட்டில் நடைபிணங்களாக
அலைகின்றார்களே !

அவர்களின் நிலையைச் சற்று
உணர்ந்து பார்க்க வேண்டாமா ?
நாடு, நமக்கென்ன செய்ததென்று

கேட்கின்றோமே யொழிய - நாம்
அதற்கென்ன செய்தோமென்று
எண்ணிப் பார்க்கிறோமா ?
இல்லையே !

இளைஞனே !
இன்று நாம் சுதந்திரமாக, உலகவானில்
சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கின்றோமே
அதற்கு காரணம் தான் யார் ?

Scanned by TapScanner

# தமிழின் கலையும் !
# தமிழ் நாட்டின் நிலையும் !!

அ. குமரவேல்சாமி
இளங்கலை வணிகவியல், இரண்டாமாண்டு

பாரடா தமிழா ! பாரில் தமிழின் நிலையை !!

கேளடா தமிழா ! பாரில் தமிழ் நாட்டின் நிலையை !!

எழுந்திரு தமிழா ! தமிழ்த்தாயை வாழ வைக்க !!

புறப்படு தமிழா ! தமிழ்ப் புலிகளை எழுப்ப !!

வெகுண்டெழு தமிழா ! வெற்றி வாகை சூட !!

இந்தியத் தமிழா வா ! தமிழ் இலக்கியம் படைக்க !!

தாவிவா தமிழா ! தமிழ்க் காவியம் படைக்க !!

கொதித்தெழு தமிழா! தரணியில் தமிழ்க்கொடி நாட்ட!!


இளந்தமிழா வா ! பழந்தமிழ் நாடு காக்க !!

தங்கத் தமிழா வா ! தமிழ்த்திரு நாடு காக்க !!

செந்தமிழா வா ! தமிழ்ச் சிங்கங்களை எழுப்ப !!

சிங்கத் தமிழா வா ! சங்கத் தமிழ் காக்க !!

சங்கத் தமிழா வா ! தமிழ்ச் சங்கங்கள் உருவாக்க !!



Scanned by TapScanner

With best compliments from :

# JAI RENGA MILLS PRIVATE LIMITED

**RAJAPALAYAM.**

K. P. JAYARAMA RAJA
Managing Director.

K. S. R. SRIRENGA RAJ, B.A.,
Director.

Scanned by TapScanner

"நினைத்தாலே இனிக்கும்"



போன் கடை : 2860
வீடு : 5009

# நியூ பாம்பே ஸ்வீட்ஸ்

## வட இந்திய ஸ்வீட் கடல்

**பெங்காலி மில்க் ஸவீட்ஸ் எமது தனிச் சிறப்பு**

**1) பஸ் நிலைய வடபுரம் 2) P. S. K. பார்க் வடபுரம்**

**இராஜபாளையம்.**

குறிப்பு : குறிப்பிட்ட நேரத்தில் ஆர்டர்கள் செய்து தரப்படும்.

Printed by : Sree Velmurugan Press, Rajapalayam, Phone : 2162